# பகுதி – II


| | பக்கம் |
|---|---|
| மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் | ( i–Lii ) |
| ஆளணி | ( Liii–Lvii ) |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும் | ( i ) |
| நாணய வெளியீடு | ( viii ) |
| வங்கித் தொழில் அபிவிருத்தி | ( ix ) |
| வங்கி மேற்பார்வை | ( xi ) |
| அபிவிருத்தி நிதி | ( xii ) |
| கிராமியக் கொடுகடன் | ( xviii ) |
| பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | ( xxv ) |
| கிராமிய வங்கித்தொழில், அலுவலர் பயிற்சிக்கல்லூரி | ( xxviii ) |
| ஊழியர் சேம நிதியம் | ( xxx ) |
| செலாவணிக் கட்டுப்பாடு | ( xxxii ) |
| பொதுப் படுகடன் | ( xxxvi ) |
| பிரதேச அலுவலகம்-மாத்தறை | ( xxxvii ) |
| பிரதேச அலுவலகம்-அநுராதபுரம் | ( xxxx ) |
| பிரதேச அலுவலகம்-மாத்தளை | ( xxxxv ) |
| வெளியீடுகள் | ( xxxxvii ) |
| ஆய்வரங்குகள் | ( xxxxviii ) |
| அளவீடுகள் | ( L ) |
| பயிற்சி | ( Li ) |
| தரவு செய்முறைப் படுத்தல் | ( Li ) |
| முகாமைக் கணக்காய்வு | ( Liii ) |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும்

மத்திய வங்கியின் 1987 திசெம்பர் 31 இன்படியான ஐந்தொகையும் 1987 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கணக்கும் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளன.

1987 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 454,442 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் அவற்றின் மட்டத்தினை விட 5.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன. சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட உயர்வும் (6.0 சதவீதம்), ஏனைய சொத்துக்கள் கணக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் (23.5 சதவீதம்) காரணமாயின. உள்நாட்டுச் சொத்துக்களில் அரசிற்கான கடன்களும் முற்பணங்களும் (13.9 சதவீதம்), நடுத்தர, நீண்டகாலக் கடன்கள் (34.4 சதவீதம்) என்பவற்றில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. குறுங்காலக் கடன்கள் மற்றும் அரச, அரச உத்தரவாதப் பிணைகளும் முறையே 3.6 சதவீதத்தினாலும், 3.3 சதவீதத்தினாலும் அதிகரித்தன. வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு 7.4 சதவீதத்தினால் குறைவடைந்தது.

இவ்வாண்டுக் காலத்தில், வங்கியின் பொறுப்புக்கள் உயர்வடைந்தமைக்கு வெளிநாட்டுக் கடன்பாடுகள் 1986 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்த மீதியற்ற தன்மையுடன் ஒப்பிடுகையில் 1987 இறுதியில் ரூ. 18,017 இலட்சங்களைக் கொண்டிருந்தமையே முக்கிய காரணமாகும். வங்கியின் பொறுப்புக்களில் ஏற்பட்ட ஏனைய அதிகரிப்புக்கள் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் (17.1 சதவீதம்), நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் (24.4 சதவீதம்), மூலதன உதவு தொகைக் கணக்கு (25.0 சதவீதம்), ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் (17.5 சதவீதம்) என்பனவற்றில் காணப்பட்டன. இவ்வதிகரிப்புக்கள் மத்திய வங்கிப் பிணை உடைமைகள் (99.2 சதவீதம்), வைப்புக்கள் (23.1 சதவீதம்) என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டன.

1987 ஆம் ஆண்டிற்கான வங்கியின் வருமானம் ரூ. 40,572 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 10.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. செலவு, ஒதுக்குக் கணக்குகள், பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கல்கள் என்பனவற்றிற்கு இடமளித்த பின்னர் மத்திய வங்கியின் தேறிய இலாபம் ரூ. 16,510 இலட்சமாக விளங்கியது. நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 39 (பி) இன் நியதிகளின்படி வங்கியின் மிகைக்கு ரூ. 10 இலட்சம் மாற்றல் செய்யப்பட வேண்டியிருந்தது. மீதியான ரூ. 16,500 இலட்சம் கொண்ட தொகை நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 39 (சி) இன் நியதிகளின்படி மத்திய வங்கிக்கான அரசின் வெளிநின்ற கடப்பாடுகளின் ஒரு பகுதியினைத் தீர்ப்பனவு செய்வதற்குப் பயன்படுத்துவதற்காக அரசிற்குச் செலுத்தப்பட்டது.

## வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள்

மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுடனான அதன் கொடுக்கல் வாங்கல்களுக்காக இலங்கை ரூபாவிற்கெதிரான ஐ.அ. டொலரின் நாளாந்த உடன் வாங்கும் விற்கும் வீதங்களைத் தொடர்ந்தும் தீர்மானித்துவந்தது. ஐக்கிய அமெரிக்க

## இலங்கை மத்திய

### 1987 ஆம் ஆண்டு

| 1986 திசெம்பர் 31 ரூபா | 1986 திசெம்பர் 31 ரூபா | பொறுப்புக்கள் | 1987 திசெம்பர் 31 ரூபா | 1987 திசெம்பர் 31 ரூபா |
|---|---|---|---|---|
| | | **மூலதன கணக்குகள்** | | |
| 15,000,000 | | முதல் ... | 15,000,000 | |
| 80,000,000 | 95,000,000 | மிகை ... | 81,000,000 | 96,000,000 |
| | | **சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 12,229,000,668 | | தாள்கள் ... | 14,373,290,993 | |
| 634,241,496 | 12,863,242,164 | குத்திகள் ... | 689,812,604 | 15,063,103,597 |
| | | **வைப்புக்கள்** | | |
| 1,710,810,540 | | அரசு ... | 1,553,255,643 | |
| 122,732,153 | | அரச முகவர் நிலையங்களும் அரச நிறுவனங்களும் | 163,115,650 | |
| 5,045,339,209 | | வர்த்தக வங்கிகள் ... | 4,046,916,751 | |
| 2,463,197,152 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கி நிறுவனங்கள் ... | 581,503,815 | |
| 103,942 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 177,613,005 கொண்ட தொகை நீங்கலாக கட்டாயச் சேமிப்பு நிதி ... | 91,413 | |
| 664,531,455 | 10,006,714,451 | ஏனையவைகள் ... | 1,354,268,631 | 7,699,151,903 |
| | இல்லை | வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ... | | 1,801,653,900 |
| | 1,025,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் ... | | 1,275,000,000 |
| | 160,000,000 | மூலதன உதவுதொகைக் கணக்குகள் ... | | 200,000,000 |
| | 2,603,633,000 | மத்திய வங்கிப் பிணைகள் ... | | 19,575,000 |
| | 16,410,354,180 | ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் ... | | 19,289,714,583 |
| | 43,163,943,795 | | | 45,444,198,983 |

### 1987 திசெம்பர் 31 ஆம் நாள் முடிவுற்ற

| 1986 ரூபா | 1986 ரூபா | | 1987 ரூபா | 1987 ரூபா |
|---|---|---|---|---|
| | 1,729,274,810 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்களையும், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடங்களினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும், உள்ளடக்கும்) நாணயவிதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படிசெய்யப்பட்ட ஒதுக்குகளுக்கும். | | 2,342,506,824 |
| | | 1987 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறிய இலாபம் | | |
| 236,255,802 | | நாணய சீராக்கக் கணக்கிற்கு நாணய விதிச்சட்டத்தின் 39 (அ) பிரிவின் நியதிகளின்கீழ் தீர்ப்பனவு செய்யப் பட்ட நிலுவை | 63,627,154 | |
| 1,000,000 | | நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன்படி மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது. | 1,000,000 | |
| 1,723,000,000 | 1,960,255,802 | நாணயவிதிச் சட்டத்தின் 39 (இ) நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வரவேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு | 1,650,000,000 | 1,714,627,154 |
| | 3,689,530,612 | | | 4,057,133,978 |

1987ஆம் அண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை அரசியல் அமைப்பின் உறுப்புரை 154 (1) இற்கு அமையவும் 1971இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் நாணயவிதிச் சட்டத்தின் அத்தியாயம் 422) பிரிவு 42 (1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (2) இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்,
கொழும்பு–7.
1988, எப்பிறல் 20

எஸ். எம். சப்றி
பதில் கணக்காய்வாளர் நாயகம்

## வங்கியின் ஐந்தொகை

**திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளபடி**

| 1986 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1987 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 4,728,955,695 | | இலங்கைக்கு வெளியே உள்ள பணங்களும், நிலுவைகளும் | 3,204,821,056 | |
| 4,810,389,476 | | *வெளிநாட்டுப் பிணைகளும் திறைசேரி உண்டியல்களும் .. | 5,629,946,335 | |
| 84,801 | 9,539,429,972 | கையிருப்பிலிருக்கும் சிறப்பு எடுப்பனவு உரிமை ... | 3,398,272 | 8,838,165,663 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| | | கடன்களும் முற்பணங்களும் | | |
| 4,625,461,262 | | அரசிற்கு .. | 5,268,673,355 | |
| 748,540,277 | | ஏனையவற்றிற்கு—நடுத்தர, நீண்டகால .. | 1,005,873,320 | |
| 2,403,793,574 | | குறுங்கால .. | 2,490,282,769 | |
| 20,220,560,536 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ... | 20,888,161,290 | |
| 160,000,000 | 28,158,355,649 | நிதி ஏனைய நிறுவனங்களுக்கான உதவுதொகைகள் ... | 200,000,000 | 29,852,990,734 |
| | 5,466,158,174 | ஏனைய சொத்துக்களும், கணக்குகளும் ... | | 6,753,042,586 |
| | | *அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1இல் ரூபா 5.527,675 முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24இல் ரூபா 57,450 முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூபா 2,933,697 ஆகவும், ரூபா 34,340/– ஆகவும் இருந்தன.) | | |
| | 43,163,943,795 | | | 45,444,198,983 |

## ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| 1986 | | | 1987 | |
|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா |
| | 3,689,530,612 | பெறப்பட்ட வட்டி, ஏனையவை | | 4,057,133,978 |
| | 3,689,530,612 | | | 4,057,133,978 |

வர்ணசேன இராசபுத்திரம்
ஆளுநர்
1988, மார்ச்சு 22

என். ஏ. தர்மபந்து
முதன்மைக் கணக்காளர்

டொலருக்கான உடன் வாங்கும் விற்கும் வீதங்களுக்கிடையிலான வேறுபாடு 1987 மாச்சு 9 ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு 100.00 ஐ.அ. டொலருக்கும் ரூ. 1.50 இலிருந்து ரூ. 3.00 இற்கு விரிவாக்கப்பட்டது. அதேநேரம் வர்த்தக வங்கிகளுக்கான ஐ.அ. டொலர்களின் உடன் விற்பனைகளையும் வங்கி நிறுத்திக் கொண்டது. 1987 திசெம்பர் இறுதியில் ஐ.அ. டொலர் ஒன்றுக்கான உடன் வாங்கும் விற்கும் வீதங்கள் முறையே ரூ. 30.7475 ஆகவும், ரூ. 30.7775 ஆகவும் விளங்கின.

முன்மாற்றுச் செலாவணி வீதங்களில் உறுதிப்பாட்டினைப் பேணும்பொருட்டு முன்மாற்று ஐ.அ. டொலர் விற்பனையின்மூலம் வங்கி சந்தையில் தொடர்ந்தும் தலையிட்டு வந்தது. இத்தகைய காப்புக்காலம் 3 மாதங்கள் வரையிலிருந்தது.

**ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்**

1987 ஆம் ஆண்டுப்பகுதியில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய வசதிகளினூடாக இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் பெறுமதியான ரூ. 79,076 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 72,525 இலட்சங்களாக விளங்கியது. மீளாய்விற்குரிய ஆண்டிற்கான தேறிய கொடுப்பனவுகள் 1986 இன் தேறிய கொடுப்பனவான ரூ. 9,256 இலட்சத்திற்கெதிராக ரூ. 5,766 இலட்சமாக விளங்கியது.

ஆறு மாதங்கள் வரைக்குமான உடன்மாற்று, முன்மாற்று வீதங்களிலான நாணயங்களின் விற்பனைகளும், கொள்வனவுகளும் தொடர்ந்தும் நடைபெற்றன. இதில் சம்பந்தப்பட்ட நாணயங்களாக வங்காளதேச தக்கா, பர்மிய கியத், இந்திய ரூபாய், ஈரானிய ரியால், நேபாள ரூபாய், பாக்கித்தான் ரூபாய் என்பன விளங்கின.

**குறுங்காலக் கொடுகடன்**

அரச, அரச உத்தரவாதப் பிணைகளை பொறுப்பாக வைத்தும் வர்த்தக மற்றும் உற்பத்திகள் தொடர்பாக வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பிணையாக வைத்துப் பெறப்படும் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்) 1987 ஓகத்து 7ஆம் நாள் தொடக்கம் ஆண்டிற்கு 11 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைக்கப் பட்டது.

ஏற்றுமதிகளுக்கான மீள் நிதியிடல் திட்டங்களின்கீழ் வர்த்தக வங்கிகளுக்கான மத்திய வங்கிக் கடன் வழங்கல்கள் இவ்வாண்டு முழுவதும் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தன. வகை 1, வகை 11 என்பனவற்றின் கீழ்வரும் ஏற்றுமதிகளுக்கான மீள் நிதியிடல் காலப்பகுதி 90 நாட்களாகவே இருந்தது. எனினும் இரு வகைகளிலும் ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையிலும் 30 நாட்களைக் கொண்ட மேலுமொரு நீடிப்பு மொத்தமாக 120 நாட்களுக்கு வழங்கப்பட்டது.

வகை 1 இன் கீழான ஏற்றுமதிகளுக்குரிய மீள் நிதியிடல் தொடர்பான வட்டி வீதம் ஆண்டுக்கு 11 சதவீதமாகவும், கடன் வழங்கல் வீதம் ஆண்டுக்கு 14 சதவீதமாகவும் தொடர்ந்தும் விளங்கியது. வகை 11 இன் எற்றுமதிகளுக்குப் பொருந்தக்கூடிய தொடர்பான வீதங்கள் கடந்த ஆண்டினைப் போன்று ஆண்டுக்கு

6 சதவீதமாகவும், 9.8 சதவீதமாகவும் இருந்தன. இவ்வாண்டுக் காலத்தில் ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் வசதியின் வகை 1 இன் கீழ் ஏற்றுமதி களுக்காக வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியிடலின் ஆகக் கூடிய உச்ச எல்லே ரூ. 16,634 இலட்சமாக விளங்கியது. குறிப்பிட்ட ஏற்றுமதிகளின் விற்பனைப் பணப்பெறுகைகள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் இலங்கையில் பெறப்படும் வேளேயில் அவ்வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியிடல் கடன்களின்மீது விதிக்கப்பட்ட வட்டியில் ஆண்டிற்கு 4 சதவீதத்தினை மத்திய வங்கி தொடர்ந்தும் மீளளிப்புச் செய்தது. எனினும் இத்தள்ளுபடி இவ்விரண்டு வகைகளிலும் தொடக்க 90 நாட் காலப்பகுதிக்கு மட்டுமே பொருந்தும்.

நெல், காய்கறிகள் மற்றும் குறிப்பிட்ட உணவுப் பயிர்களின் உற்பத்தி தொடர்பாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது தனி நபர்களின் வாக்குறுதிச் சான்றிதழ்களேப் பிணையாகக் கொண்டு அவற்றிற்கெதிராக வழங்கப்பட்ட மத்திய வங்கி முற்பணங்கள் மீதான வட்டி வீதம் தொடர்ந்தும் ஆண்டிற்கு 1.5 சத வீதமாகவே இருந்தது. இம்முற்பணங்கள் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ்ப் பகிர்ந்தளிக்கப்பட்டன. புதிய அனைத்தை யும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் வர்த்தக வங்கிகளினுல் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களுக்கும் மத்திய வங்கி தொடர்ந்து உத்தரவாத மளித்தது. நெல் கொள்வனவு, உள்ளூரில் பயிரிடப்படும் குறிப்பிட்ட சில பயிர் களின் கொள்வனவு களஞ்சியப்படுத்தல் என்பனவற்றிற்கு நிதியிடுவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண்மைப் பணி நிலேயங்கள், அதிகாரம் பெற்ற தனியாட்கள் ஆகியோரின் வாக்குறுதிச் சான்றிதழ்களேப் பிணையாகக் கொண்டு அவற்றிற்கெதிராக வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட வங்கியின் முற்பணங்கள் மீதான வட்டி வீதம் மாற்றமின்றி ஆண்டிற்கு 3 சதவீதமாக விளங்கியது.

**நடுத்தர நீண்டகாலக் கொடுகடன்**

1987 ஆம் ஆண்டில் மத்திய வங்கி நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின்கீழ் மீள் நிதியிடல் திட்டத்தினைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தியது வங்கி சுற்றுலாக் கைத்தொழிலின் நிலுவையிலிருந்த வட்டி, தவணைக் கடன்கள் என்பனவற்றிற்கான மூலதனமயமாக்கலேத் தொடர்ந்தும் மீள் நிதியிட்டதுடன் கடற்றொழில்துறை வங்கிப் புத்தாக்கக் கடன்கள், சீன இஞ்சிப் பயிர்ச்செய்கைக் காக வழங்கப்பட்ட கடன்கள் என்பவற்றுக்கு மீள் அட்டவணையிடல் திட்டத்தின் கீழ் வட்டியில்லாக் கடன்களேயும் கடன் வழங்கும் வங்கிகளுக்கு அளித்தது. நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் நிலுவை 1986 இறுதியில் ரூ. 10,250 இலட்சத்திலிருந்து 1987 திசெம்பர் இறுதியில் ரூ. 12,750 இலட்சத் திற்கு அதிகரித்தது. இத்திட்டத்தின்கீழ்க் கொடுகடன் நிறுவனங்களுக்கு வழங்கப் பட்ட கடன்களின் தொகையும் 1987 திசெம்பர் 31இல் வெளிநின்ற தொகையும் ரூ. 10,059 இலட்சமாகும். மேற்குறிப்பிட்ட திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மீள் நிதியிடல் கடன்களுக்குப் பொருந்தத்தக்க வட்டி வீதங்கள் மாற்றமின்றிப் பின்வருமாறு விளங்கின.

*அட்டவணை 2.2*

**நடுத்தர நீண்டகால மீள் நிதியிடல் கடன்கள் மீதான வட்டி வீதம்**

| வகை | மீள் நிதியிடலின் அளவு (மொத்தக் கடனின் சதவீதம்) | கடனின் காலம் (ஆண்டு) | மீள் நிதியிடலின் மீதான வட்டி வீதம் | | கொடுகடன் நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட இலாபம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | அ<br>செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 50 இலட்சமும் அதற்கு குறைவானதும் | ஆ<br>செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 50 இலட்சத்திற்குக் கூடியது | அ<br>செயற்றிட்டத்தின் மொத்தக் செலவு ரூ. 50 இலட்சமும் அதற்குக் குறைவானதும் | ஆ<br>செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 50 இலட்சத்திற்குக் கூடியது |
| I | 100% | 3–15 | 8½% | 8½% | 4% | 4% |
| II | 70% | 3–15 | 7% | 8% | 2% | 2% |
| III | 60% | 3–15 | 8% | 8% | 4% | 4% |
| IV | 60% | 3–15 | 10% | 10% | 4% | 4% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

*1987* மாச்சு *16* ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டுக்குவந்த நடுத்தர நீண்டகாலக் கடன்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம், நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் திட்டத்தின் வகை *1* இன் கீழான மீள் நிதியிடலின் குறிப்பிட்ட கொடுகடன் திட்டத்தின்கீழ்ப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களுக்கான உத்தரவாதங்களை வழங்குகின்றது. *1987* இல் ''பாற்பண்ணை அபிவிருத்திக்கான கொடுகடன் திட்டம்'' மற்றும் இலங்கை ஆசிய அபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன் திட்டம் என்பன உத்தரவாதத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன.

**வர்த்தக வங்கிக் கொடுகடன்**

*1984* இல் விதிக்கப்பட்ட கொடுகடன் எல்லைகள் *1987* இலும் தொடர்ந்து தொழிற்பாட்டிலிருந்தன. இவ்வுச்ச எல்லை நியதிகளின்படி மத்திய வங்கி எல்லா வர்த்தக வங்கிகளையும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொண்டது:—

(அ) இன்றியமையாதனவல்லாத விடயங்களின் இறக்குமதிக்காக வழங்கப்பட்ட முற்பணங்களின் மொத்தத் தொகை *1984* மாச்சு *23* இல் வழங்கப்பட்டு வெளிநிற்கும் முற்பணங்களை விஞ்சக்கூடாது;

(ஆ) இன்றியமையாதனவல்லாத இறக்குமதிகளைப் பொறுத்தவரை *1984* மாச்சு *23* இல் வெளிநிற்கும் மட்டத்திற்கு அப்பால் எந்தவொரு தனிப்பட்ட இறக்குமதியாளர்களுக்கும் கொடுகடன் அதிகரிக்கப்படக் கூடாது;

(இ) ஏற்றுமதிகள், வேளாண்மை, கைத்தொழில் தவிர்ந்த ஏனையவற்றிற்காகத் தனியார்துறைக்கு வழங்கப்பட்டு வெளிநிற்கும் மொத்த முற்பணங்கள் *1984* மே *11* இல் வழங்கப்பட்டு வெளிநிற்கும் அத்தகைய மொத்த முற்பணங்களின் 5 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

**ஒதுக்குந் தேவைகள்**

மேலதிகப் பற்றுக்களின் பயன்படுத்தப்படாத நிலுவைகளுக்கெதிராக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒதுக்குத் தேவைகள் 1987 யூன் 5 ஆம் நாளிலிருந்து புறக்கீடு செய்யப்பட்டன.

1987 ஒகத்து 7 ஆம் நாளிலிருந்து கேள்வி வைப்புக்களுக்கு எதிரான வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்கு விகிதம் 18 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கும், 90 நாட்களை விஞ்சாத தவணை வைப்புக்களுக்கெதிரான விகிதம் 14 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. 90 நாட்களுக்குக் கூடுதலான தவணை வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், சிறப்பு வைப்புக்கள் என்பனவற்றிற்கெதிரான ஒதுக்கு விகிதம் மாற்றமின்றி 10 சதவீதமாக இருந்தது.

**திறைசேரி உண்டியல்களின் இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகள்**

இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் கொடுக்கல் வாங்கல்களை மத்திய வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. திறைசேரி உண்டியல்களின் மொத்த விற்பனை 1986 இன் ரூ. 742,951 இலட்சத்திலிருந்து 1987 இல் ரூ. 488,084 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது. மொத்தக் கொள்வனவும் கூட ரூ. 318,173 இலட்சத்திலிருந்து ரூ. 242,555 இலட்சங்களுக்கு வீழ்ச்சியுற்றது.

இவ்வாண்டுக் காலத்தில் அழைப்புப் பணச் சந்தையின் வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 5.375 சதவீதத்திற்கும் 20 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டமைந்த வேளையில் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தைத் தொழிற்பாடுகளுக்குப் பொருந்தத்தக்க கழிவு வீதங்கள் ஆண்டிற்கு 10.3 சதவீதத்திற்கும், 11.0 சதவீதத்திற்கும் இடையில் வேறுபட்டன.

**இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவு தொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்**

1964 இல் இந்திய இலங்கை உடன்படிக்கையின்கீழ் அடங்கும் இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புவதைத் துரிதப்படுத்துவதற்கான இரு திட்டங்களையும் அரசின் சார்பில் வங்கி தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. அவையாவன:—

(அ) ஒப்புதலளிக்கப்பட்ட உதவு தொகைளின் 65 சதவீதத்திற்குச் சமமான தொகை அல்லது அதன் ஒரு பகுதி அத்தகைய குடிபெயர்ந்து செல்வோருக்குச் செலுத்தப்பட வேண்டுமென்ற நியதியைக் கொண்ட உதவுதொகைத் திட்டம். அத்துடன்;

(ஆ) நாட்டை விட்டு வெளியேறும் ஒவ்வொருவருக்கும் வெகுமதிக் கொடுப்பனவான ரூ. 500 உம் அதில் 65 சதவீதமும் இலங்கையை விட்டு இத்தொழிலாளர்கள் நீங்குவதற்கு ஊக்குவிப்புப் பணமாகச் செலுத்தப்படும் திட்டமும் ஆகும்.

வங்கி இவ்விரு திட்டங்களையும் வர்த்தக வங்கிகளுக்கூடாகச் செயற்படுத்தியது.

**கட்டாயச் சேமிப்பு நிதியம்**

மத்திய வங்கியானது 1971 இன் எண் 6 கொண்ட கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தினதும் 1972 இன் எண் 15 கொண்ட வருமான உச்ச வரம்பு, கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தினதும் நியதிகளின்படி சேகரிக்கப்பட்ட பணத்தின் பாது காவலனுகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் அரசின் சார்பாகக் கட்டாய சேமிப்பு நிதியத்தின் நிருவாகத்தினையும் மேற்கொண்டது. இவ்வாண்டில் வங்கி அதன் உதவுநர்களுக்கு வட்டியுட்பட ரூ. 33 இலட்சம் கொண்ட தொகையைச் செலுத் தியது.

**ஏற்றுமதியாளர்களுக்கான இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடி**

ஏற்றுமதியாளர்களின் தீர்வைத் தள்ளுபடிக் கோரல் கொடுப்பனவுகளை விரைவுபடுத்தும் அரசின் தீர்மானத்தினைத் தொடர்ந்து 1987 மாச்சில் மத்திய வங்கி வங்கித்தொழில் திணைக்களத்தில் இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தியது. இத்திட்டத்தின்படி ஏற்றுமதியாளர்களின் தீர்வை தள்ளு படிக் கோரல்கள் அவர்களின் வங்கிகளினுல் தீர்க்கப்படும். அதனைத் தொடர்ந்து இக்கோரல்களை மத்திய வங்கி பெற்றதும் அவ் வங்கிகளுக்கு மத்திய வங்கியினுல் பணம் மீள வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 1987 ஆம் ஆண்டில் மொத்தமாக ரூ. 1,993 இலட்சம் கொண்ட தொகை செலுத்தப்பட்டது.

**அரச கணக்குகள்**

அரசின் வங்கியாளராக வங்கித்தொழில் திணைக்களத்தின் அரச கணக்குக் கிளையானது அரச திணைக்களங்கள், அரச முகவர்கள், நிறுவனங்கள், மற்றும் சில நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணியது. 1987 திசெம்பர் இறுதியில் அரச கணக்குக் கிளையில் தொழிற்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 163 ஆக விளங்கியது.

**நாணய வெளியீடு**

1987 திசெம்பர் 31 இல் சுற்றேட்டத்திலுள்ள மொத்த நாணயம் ரூ. 150,631 இலட்சமாக விளங்கி ரூ. 143,733 இலட்சங் கொண்ட தாள்களை யும், ரூ. 6,898 இலட்சங் கொண்ட குத்திகளையும் உள்ளடக்கியிருந்தது. இது முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ள ரூ. 128,632 இலட்சம் தொகையைவிட ரூ. 21,999 இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலித்தது. 1986 திசெம்பர் 31 இல் சுற்றேட்டத்திலிருந்த தொகையுடன் ஒப்பிடுகையில் 1987 திசெம்பர் 31 இல் சுற்றேட்டத்திலிருந்த நாணயத் தாள்கள் ரூ. 21,443 இலட்சம் (18 சதவீதம்) உயர்வாக இருந்தவேளையில் சுற்றேட்டத்திலிருந்த குத்திகள் ரூ. 556 இலட்சம் (9 சதவீதம்) உயர்வாக இருந்தது.

முன்பக்கத்தில் விக்டோரியா அணையின் தோற்றத்தினையும் பின்பக்கத்தில் உறுகுணு பல்கலைக்கழகத்தையும் எடுத்துக்காட்டும் விதத்தில் வடிவமைக்கப்பட்ட ரூ. 1,000 இன நாணயத் தாள் ஆண்டின் பின்னரைப்பகுதியில் சுற்றோட்டத்திற்கு விடப்பட்டது. போலி நாணயத் தாள்களைத் தடுக்கும் மேலதிக வழிமுறையாக ஏனைய இனத் தாள்களின் மீது காணப்படும் சாதாரண பிளாத்திக்கிலான பாதுகாப்பு நூலுக்குப் பதிலாக இரு உயர் இன நாணயத் தாள்களிலும், ''வெள்ளிக் கம்பி'' என அழைக்கப்படும் புதிய பாதுகாப்பு நூல் சேர்க்கப்பட்டுள்ளது. 1987 சனவரி 1 ஆம் நாளன்றும் அதன் பின்னரும் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அனைத்துத் தாள்களிலும் ஆங்கிலத்தில் மத்திய வங்கியின் பெயர் ''சென்றல் பாங் ஒவ் சிறிலங்கா'' எனத் திருத்தப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட (தனியார்) பிராட்பறி வில்கின்சன் லங்கா இலங்கை அரசுடனான கூட்டாக இணைந்ததொரு முயற்சியாக ஏற்படுத்தும் பாதுகாப்பு அச்சிடல் பொறித் தொகுதி 1987 மேயில் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்குவதுடன் வங்கியின் எதிர்கால நாணயத் தாள்களின் தேவைகள் முழுவதும் உள்நாட்டிலேயே அச்சிடப்படும்

வீடற்றோருக்கான பன்னாட்டு வீடமைப்பு ஆண்டின் ஞாபகார்த்தமாக 1987 ஏப்பிறலில் ரூ. 10 இன நாணயக் குத்தியொன்று சுற்றோட்டத்திற்கு விடப்பட்டது.

## வங்கித் தொழில் அபிவிருத்தி

உள்நாட்டு வங்கித்தொழில் துறை பலம்பெற்றமையே 1987 இன் வங்கித் தொழில் அபிவிருத்தித் துறையில் காணப்பட்ட முக்கிய பண்பாக இருந்தது. இரு புதிய உள்நாட்டுத் தனியார் வங்கிகள் உருவாகியமையுடன் 1987 இல் வர்த்தக வங்கித்தொழில் துறை அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம் பெற்றன. இவ்விரு புதிய வங்கிகளிலும் வரையறுக்கப்பட்ட முதலீட்டுக் கொடுகடன் வங்கி, வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி எனப் பெயர் மாற்றம் பெற்று 1987 மாச்சில் அலுவல்களைத் தொடங்கியதன் மூலம் நாட்டில் தொழிற்படும் உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்ததுடன் தனியார் உள்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்தது. 1987 திசெம்பரில் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 121 (பி) இன் கீழ் வரையறுக்கப்பட்ட சிலான் றஸ்ற் வங்கி என்ற பெயரில் உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட இன்னுமொரு தனியார் வங்கியினை நிறுவுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. 1987 இறுதியில் இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 19 வெளிநாட்டு வங்கிகளையும், 5 உள்நாட்டு வங்கிகளையும் உள்ளடக்கி 24 ஆக விளங்கியது.

கிளை வங்கித் தொழில் துறையில், 1987 ஆம் ஆண்டில் மொத்தமாக 5 கிளைகள் திறக்கப்பட்டதுடன் இவற்றில் மூன்று கிளைகள் இரு அரச வங்கிகளுக்குச் சொந்தமானவையாக இருந்தன. இலங்கை வங்கி கலேவெலயில் புதிய கிளையொன்றைத் திறந்ததுடன் அதன் றிகில்லகஸ்கட வேளாண்மைப் பணி நிலயக் கிளையை முதன்மைக் கிளையாகத் தரமுயர்த்தியது. இலங்கை வங்கியின் ஒறுவலே கிளை கடுவெலேக் கிளையுடன் ஒருங்கிணைக்கப்பட்டதன் விளைவாக 1987 ஓகத்து 7 ஆம் நாள் முதல் ஒறுவலேக் கிளையின் தொழிற்பாடு நிறுத்தப்பட்டது. இதன்படி 1986 இறுதியில் 238 ஆக விளங்கிய இலங்கை வங்கியின் முதன்மைக் கிளைகளினது எண்ணிக்கை 1987 இறுதியில் 239 ஆக அதிகரித்தது. மக்கள் வங்கியும் 1987 சனவரியில் இரத்தினபுரியில் புதியதொரு கிளையைத் திறந்தமையின் காரணமாக அதன் மொத்தக் கிளைகளின் எண்ணிக்கை 298 ஆகியது. 1987 இல் தனியார் உள்நாட்டு வங்கிகளினுல் நிறுவப்பட்ட இரு கிளைகளும் கொழும்பு 10 இலுள்ள வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் தலைமை அலுவலகக் கிளையையும் களுத்துறையில் அமைந்துள்ள அட்டன் நசனல் வங்கியின் கிளையையும் உள்ளடக்கியுள்ளன. புதிய கிளைகளை நிறுவியமை ஏற்கனவேயிருந்த கிளைகளை ஒழுங்குமுறைப்படுத்தியமை என்பன தொடர்பாக ஏற்பட்ட இம் மாற்றங்களினுல் வர்த்தக வங்கிகளினது முதன்மைக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1986 இறுதியில் 604 இலிருந்து 1987 இறுதியில் 608 இற்கு உயர்வடைந்தது.

1987 ஆம் ஆண்டில் 4 புதிய பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் கேகாலை, புத்தளம், காலி, கண்டி ஆகிய மாவட்டங்களில் நிறுவப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 9 ஆகியது. மீளாய்விற்குரிய ஆண்டில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 29 இனுல் உயர்வடைந்தது. ஆண்டின் இறுதியில் 61 கிளைகள் இருந்தன.

தேசிய சேமிப்பு வங்கியும் 1987 இல் இரு புதிய கிளைகளைப் பொரளையிலும், அக்மனவிலும் திறந்தமையின் மூலம் நாட்டின் வங்கித் தொழில் வலையமைப்பு விரிவடைவதற்கு உதவியது. 1987 இன் முடிவில் இதன் கிளைகளினது மொத்த எண்ணிக்கை 62 ஆகியது.

காசோலைத் தீர்ப்பனவுத் தொழிற்பாடுகளை விரைவுபடுத்துவதற்கான தன்னியக்கக் காசோலைத் தீர்ப்பனவு முறை தொடர்பாகத் தேவைப்படும் இன்றியமையாத கருவிகளை நிறுவுதல், மேலதிக அலுவலர்களைச் சேர்த்தல் போன்ற இறுதி ஒழுங்குகளை மேற்கொண்டதன்மூலம் மத்திய வங்கி இலங்கையில் வர்த்தக வங்கித் தொழிற்பணிகளை நவீனப்படுத்தும் அதன் கொள்கையைத் தொடர்ந்தும் பின்பற்றியது.

## வங்கி மேற்பார்வை

### வர்த்தக வங்கிகள்

1986 இல் தொடங்கிய ஏழு வர்த்தக வங்கிகளின் பரீட்சிப்புக்கள் 1987 இல் முடிவுற்றன. 1987 இல் தொடங்கிய எட்டு வர்த்தக வங்கிகளின் (இரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் உட்பட) பரீட்சிப்புக்களில் மூன்றின் பரீட்சிப்புக்கள் முடிவடைந்துள்ளன. 1986/87 பரீட்சிப்புக் காலப்பகுதி 1988 வரை ஒரு ஆண்டினுல் நீடிக்கப்பட்டது. வங்கி, வர்த்தக வங்கிகளின் நிதி நிலைமைகளை அவ்வங்கிகளினுல் மாதாந்த அடிப்படையில் வழங்கப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்களினைக் கொண்ட கூற்றின் அடிப்படையில் தொடர்ந்தும் கண்காணித்தது. 1986 ஆம் ஆண்டிற்கான வர்த்தக வங்கிகளின் இலாபத் தன்மையும் அவற்றினுல் வழங்கப்பட்ட திரட்டுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இலங்கையில் தொழிற்படும் வெளிநாட்டு வங்கிகளினுல் அவற்றின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியையும் வங்கி அரையாண்டு அடிப்படையில் கண்காணித்து வந்தது.

ஒழுங்கான முற்பணங்களிலிருந்து செயற்படா முற்பணங்களை விலக்கிவிடுவதற்கானதொரு பணிப்புரையும், அத்தகைய முற்பணங்களிலிருந்து பெறப்படும் வட்டி இலாபமாகக் கருதப்பட வேண்டும் என்பதற்கான அறிவுறுத்தல்களும் 1987 இல் வெளியிடப்பட்டன. இது வர்த்தக வங்கிகளின் நிதி நிலைமைகளையும் இலாபத் தன்மையையும் மிகச் சரியாகக் கண்காணிப்பதற்கான வசதியை ஏற்படுத்தும்.

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தின்கீழ் வர்த்தக வங்கிகளினுல் நிறுவப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணிக்கும் அதன் நிகழ்ச்சித் திட்டத்தினை வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது.

வர்த்தக வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், கூட்டுறவு கிராமிய வங்கிகள் என்பனவற்றினை உள்ளடக்கத்தக்க விதத்தில் வைப்புக் காப்புறுதித் திட்டமொன்று 1987 இல் மத்திய வங்கியினுல் தொடக்கி வைக்கப்பட்டது.

### நிதிக்கூட்டு நிலையங்கள்

1987 டிசெம்பர் 31 ஆம் நாளன்று மத்திய வங்கியுடன் பதிவு செய்து கொண்ட நிதிக் கூட்டு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 71 ஆக விளங்கியது. மீளாய்விற்குரிய ஆண்டில் பதிவு செய்தலுக்காக வங்கியினுல் ஐந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. எனினும் ஒரு கூட்டு நிலையம் பதிவு செய்யப்பட்ட வேளையில் இரு கூட்டு நிலையங்களின் விண்ணப்பங்கள் 1979 இன் எண் 27 கொண்ட நிதிக் கூட்டு நிலையங்களின் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளுக்கு ஒவ்வாதமையினுல் நிராகரிக்கப்பட்டன.

மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்ட இரு நிதிக் கூட்டு நிலையங்கள், நிதிக் கூட்டு நிலையங்களின் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளின் வரையறைகளுக் கிணங்க அலுவல்களை மேற்கொள்ளாமையின் காரணமாக அவற்றிற்கு வழங்கப் பட்ட உரிமங்கள் வங்கியினுல் இரத்துச் செய்யப்பட்டன. நாணயச் சபை ஆறு கூட்டு நிலையங்களினது அலுவல்களின் இடைநிறுத்தத்திற்கு ஒப்புதலளித்தது. பின்னர் அவற்றில் ஐந்துக்குக் குறிப்பிட்ட நியதிகள், நிபந்தனைகளுக்கிணங்கத் தமது அலுவல்களை மீண்டும் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. எஞ்சிய மற்றக் கூட்டு நிலையத்தைக் கலைத்துவிடுவதற்கான விண்ணப்பம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாணயச் சபையினுல் வழங்கப்பட்ட பணிப்புரைகளை மீறியமைக்காகக் குறிப்பிட்ட நிதிக் கூட்டு நிலையங்களின் பணிப்பாளர்களுக் கெதிராகச் சட்ட நடவடிக்கைகளை நிறுவுவதற்கான தொடக்க நடவடிக்கை களும் வங்கியினுல் எடுக்கப்பட்டுள்ளன.

மீளாய்விற்குரிய ஆண்டில் சட்ட விதியின் 15 (1) ஆம் பிரிவின்கீழ் 42 நிதிக் கூட்டு நிலையங்கள் பரீட்சிக்கப்பட்டன. திரவச் சொத்துக்கள், மூலதன நிதியங்கள் ஆகியனவற்றின் தேவைப்பட்ட மட்டங்கள் தொடர்பாக நாணயச் சபையினுல் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்குச் சிறப்பான இடமளித்து நிறைவேற்று முகமாக நிதிக் கூட்டு நிலையங்களினுல் வழங்கப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்களின் மாதாந்தக் கூற்றுக்கள், ஆண்டு இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகை என்பன ஆய்வு செய்யப்பட்டன.

1987 திசெம்பரில் வட்டி வீதங்களின் மீதும், ஏனைய கட்டணங்களின்மீதும் கட்டுப்பாடுகளை விதிக்குமாறு வங்கி நிதிக் கூட்டு நிலையங்களிற்குப் பணிப்புரைகளை வழங்கியது. இப் பணிப்புரைகளின்கீழ் 12 மாதங்களுக்குக் கூடாத முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட வைப்புக்களின் மீது கொடுபடற்பாலதான ஆகக் கூடிய வட்டி வீதம் ஆண்டிற்கு 17 சதவீதம் என நிர்ணயிக்கப்பட்டது. 12 மாதங்களை விஞ்சிய முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட வைப்புக்களுக்குக் கொடுபடற்பாலதான ஆகக் கூடிய வட்டி ஆண்டிற்கு 18 சதவீதமாக வரையறுக்கப்பட்டது. இப் பணிப்புரைகளின் நியதிகளின்படி நிதிக் கூட்டு நிலையங்கள் குறைவடைகின்ற நிலுவைகளின் மீதான அனைத்துக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீதான வட்டியை விதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் மூலதன முதற் தொகையின் மீள் கொடுப்பனவு, வட்டி, ஏனைய கட்டணங்கள் என்பன தொடர் பான எந்தத் தொகையையும் கழிக்காது முற்பணங்களையும், கடன்களையும் பகிர்ந் தளிக்குமாறு பணிப்புரைகள் நிதிக் கூட்டு நிலையங்களைக் கேட்டுக் கொண்டன.

1987 பெப்புருவரியில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினுல் மேற்கொள் ளப்பட்ட தீர்மானத்திற்கிணங்கக் கடனிறுக்கமுடியாததாகக் காணப்பட்ட வரை யறுக்கப்பட்ட செவன நிதி முதலீட்டுக் கூட்டு நிலையத்தைக் கலைப்பதற்கான தொடக்க நடவடிக்கைகள் வங்கியினுல் எடுக்கப்பட்டன.

## அபிவிருத்தி நிதி

மத்திய வங்கி 1987 இல் கைத்தொழில் வேளாண்மை, பணிகள் என்பன வற்றிற்கான நடுத்தர நீண்டகால நிதியினை மேம்படுத்துதல் தொடர்பான நட வடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. எனினும் 1987 இன் கவனம் நடுத்தர நீண்டகால மீள் நிதியிடலிலிருந்து தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் நலிவுற்ற கைத்தொழில்களின் புத்தாக்கத்திற்கு மாற்றமடைந்தது. சுற்றுலா

விடுதித்துறைக்கு வழங்கப்பட்ட நிவாரண வழிமுறைகளை வங்கி தொடர்ந்தும் வழங்கியது. சிறிய நடுத்தரக் கைத்தொழில்—11 கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ்ப் பகிர்ந்தளிப்புக்களுடன் கூடிய தொழிற்பாடுகள் இவ்வாண்டில் இறுதிப் பகுதியில் துரிதமடைந்தது.

வங்கி, மூன்று முக்கிய துறைகளை உள்ளடக்கும் விதத்தில் 1987 சனவரியில் அதன் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடங்கியது. அவையாவன பள்ளிக்கூடங்களை விட்டு விலகுவோருக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம், உள்ளார்ந்த வளம் மிக்க தொழில் முயற்சியாளருக்கான நிகழ்ச்சித் திட்டம், மற்றும் ஏற்கனவேயுள்ள தொழில் நுட்பத்தையும் தர முயர்த்தல் என்பனவாம். முதலாவது நிகழ்ச்சித் திட்டம் 1987 பெப்புருவரியில் கெட்டிமுல்ல என்ற இடத்தில் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏனைய ஐந்து நிகழ்ச்சித் திட்டங்கள் சிலாபம், கண்டி, காலி, குளியாப்பிட்டி, கிரந்துருகோட்டை ஆகிய இடங்களில் நடைபெற்றன. இவை பள்ளிக்கூடத்தைவிட்டு விலகுவோருக்கான நான்கு நிகழ்ச்சித் திட்டங்களையும் முகாமையைத் தரமுயர்த்தும் நோக்கினைக் கொண்ட இரு நிகழ்ச்சித் திட்டங்களையும் உள்ளடக்கும்.

### அட்டவணை 2.3

### நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியம்
### (வகைகள் II—IVஇன் கீழான மீள்நிதியிடலின் ஒப்புதல்கள்)

(ரூபா பத்து இலட்சங்களில்)

| வகை | 1985 | | 1986 | | 1987 | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் தொகை | மீள் நிதி யிடப்பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதி யிடப்பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதி யிடப்பட்ட தொகை |
| II ஏற்றுமதித்துறை ... | 13.7 | 9.0 | 41.4 | 29.0 | 36.9 | 25.8 |
| III உம் IV உம் | | | | | | |
| (i) வேளாண்மை ... | 2.6 | 1.6 | 134.4(அ) | 80.6 | 38.3(ஆ) | 23.0 |
| (ii) கைத்தொழில் ... | 38.9 | 27.2 | 1.0 | 0.6 | 2.5 | 1.5 |
| (iii) சுற்றுலா விடுதிகள் | — | — | 2.5 | 1.5 | — | — |
| (iv) ஏனையவை ... | 6.5 | 3.9 | 16.5 | 14.7 | 52.0 | 31.2 |
| நலிவுற்ற கைத்தொழில்களை மீள் நன்னிலைப்படுத்தல் ... | 145.5 | 101.9 | 325.6(இ) | 316.4 | 84.8(ஈ) | 53.2 |
| மொத்தம் | 207.2 | 143.6 | 521.4 | 442.8 | 214.5 | 134.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) நடுத்தர கால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் தேயிலை பயிர்ச்செய்கை செயற்றிட்டத்திற்காக வழங்கப்பட்ட ஐந்து கடன்களின் ஒன்று சேர்ந்த தொகையான ரூ. 1,304 இலட்சங்களையும் உள்ளடக்கும்.

(ஆ) நடுத்தர கால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் தேயிலை பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட இரண்டு கடன்களையும் உள்ளடக்கும்.

இ) சுற்றுலா விடுதி செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவையிலுள்ள வட்டிகளின் மூல தனமாக்கலான ரூ. 409 இலட்சங்களையும் உள்ளடக்கும்.

(ஈ) 39 சுற்றுலா விடுதிகள் செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களின் நிலுவைகளிலுள்ள வட்டிகளின் மூலதனமாக்கலையும் உள்ளடக்கும்.

மத்திய வங்கியின் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் வகைகள் II, III, IV, கீழான மீள் நிதியிடலின் ஒப்புதல்கள் 1987 இல் ரூ. 1,347 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட ரூ. 4,428 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. இவ்வீழ்ச்சிக்குச் சுற்றுலாத் துறையிலுள்ள விடுதிகளின் புத்தாக்கத்திற்கான ஒப்புதல்கள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையே பெருமளவு காரணமாகும். ஏற்றுமதி, வேளாண்மைத்துறைகளுக்கான மீள் நிதியிடல் ஒப்புதல்களும்கூட 1986 இன் மட்டத்திற்குக் கீழே முறையே ரூ. 258 இலட்சமாகவும், ரூ. 230 இலட்சமாகவும் விளங்கியது. மீள் நிதியிடல் ஒப்புதல்களின் பகுப்பாய்வொன்று அட்டவணை 2.3 இல் காட்டப்பட்டுள்ளது.

சுற்றுலா விடுதிகளுக்கான நிவாரண வழிமுறைகளின் தொகுப்பினை நடைமுறைப்படுத்துதல் 1987 இலும் தொடர்ந்தது. 1985 இலும், 1986 இலும் பெரும்பாலான உணவு சுறறுலா விடுதிகள் இவ்வசதியைப் பயன்படுத்திவிட்டமையின் காரணமாக 1987 இல் மீள் அட்டவணையிடலுக்கான கோரிக்கைகள் சார்பு ரீதியில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. 1987 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழான உதவி 39 விடுதிச் செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீதான வட்டி நிலுவைகளை மூலதனமாக்குவதற்கே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

அட்டவணை 2.4

**சுற்றுலாக் கைத்தொழிலுக்கான நிவாரணம் — கடன்களின் மீளட்டவணை**
**(1987 திசெம்பரிலுள்ள திரட்டிய மொத்தம்)**

| கொடுகடன் நிறுவனங்களின் பெயர் | முடிவடைந்த மீளட்டவணை | | பரிசீலனையிலுள்ள மீளட்டவணை | | மத்திய வங்கியினால் மீள நிதியிடப்பட்ட நிலுவையிலிருக்கும் வட்டி |
|---|---|---|---|---|---|
| | உணவகங்களின் எண்ணிக்கை | கடன் தொகை (ரூபா) | உணவகங்களின் எண்ணிச்கை | கடன் தொகை (ரூபா) | தொகை (ரூபா.) |
| இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் .. | 25 | 155,238,020 | — | — | 84,815,390 |
| இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி .. | 13 | 157,122,465 | — | — | 88,952,009 |
| மக்கள் வங்கி .. | 16 | 95,176,179 | 16 | 77,069,527 | 1,958,869 |
| இலங்கை வங்கி .. | 10 | 58,980,375 | 13 | 55,490,099 | 881.554 |
| வரையறுக்கப்பட்ட அட்டன் நெசனல் வங்கி . | 5 | 12,243,951 | 2 | 2,134,822 | 11,678,619 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி ... | 7 | 35,295,999 | 6 | 6,335,209 | 11,266,907 |
| கிறின்லேஸ் வங்கி ... | — | — | 2 | 7,525,856 | — |
| டியூச வங்கி (ஆசியா) ஏ.ஜீ. ... | 1 | 3,059,256 | — | — | 1,833,943 |
| மொத்தம் .. | 77 | 517,116,245 | 39 | 148,555,513 | 201,387,291 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகள்**

வங்கியினுல் நிருவகிக்கப்படும் மூன்று கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழான கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகளின் தொகுப்பொன்று அட்டவணை 2.5 இல் காட்டப்பட்டுள்ளது.

**சிறிய அளவு கைத்தொழில்கள் திட்டம்**

மத்திய வங்கி அரசின் சார்பில் சிறிய அளவு கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை 1978 இல் தொடங்கியதுடன் இத்திட்டத்தின் கீழான கொடுகடன் உத்தரவாதங்களின் வழங்கல்கள் 1981 இறுதியில் முற்றுப் பெற்றன. இக்காலப்பகுதியில் ரூ. 312 இலட்சம் கடன் பெறுமதியான 767 கடன்களுக்கு வங்கியால் உத்தரவாதமளிக்கப்பட்டது. இவற்றில் ரூ. 25 இலட்சம் கடன் நிலுவையினைக் கொண்ட 108 கடன்கள் 1987 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வெளிநின்றதுடன் அவற்றில் 16 இவ்வாண்டில் முழுமையாக மீளச் செலுத்தப்பட்டது. 1987 இல் ஒரு உத்தரவாதம் புறக்கீடு செய்யப்பட்ட வேளையில் 5 உத்தரவாதங்களின் கீழான கோரல்கள் தீர்க்கப்பட்டமையினைத் தொடர்ந்து ரூ. 22 இலட்சம் கடன் நிலுவையினைக் கொண்ட 86 உத்தரவாதங்கள் இவ்வாண்டின் இறுதியில் வெளிநின்றன. 8 கடன்கள் தவிர அனைத்துக் கடன்களும் நிலுவைகளாக இருந்தனவெனினும் 8 கடன்களுக்கு மட்டுமே கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வாண்டில் இறுதியில், இந்நோக்கத்திற்காக வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி இரு பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களான மக்கள் வங்கிக்கும், இலங்கை வங்கிக்கும் ரூ. 17 இலட்சத்தினைச் செலுத்தியதன்மூலம் இத்திட்டத்தின்கீழ் மொத்தமாக 55 கோரல்களைத் தீர்ப்பனவு செய்தது. ஆண்டின் இறுதியில் ஏழு கோரல்கள் மாத்திரமே தீர்க்கப்படவேண்டியிருந்ததுடன் இதில் மூன்று கோரல்கள், கடனுளிகளால் கடன்கள் மீளச் செலுத்தப்பட்டமையின் காரணமாகத் தாமதத்திற்குட்பட்டவேளையில் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களிடமிருந்து கேட்கப்பட்ட தகவல்களை அவை வழங்காமையின் காரணமாக மற்றைய நான்கும் தீர்க்கப்படாதிருந்தன. மத்திய வங்கியினுல் இத்திட்டத்தின்கீழ் 1987 இறுதிவரை பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டணம் ரூ. 9.1 இலட்சமாக விளங்கியது.

**சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் – I**

சிறிய நடுத்தரக் கைத்தொழில் 1 இன் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் 1979 இற்கும் 1984 இற்குமிடையில் மத்திய வங்கியினுல் மொத்தமாக 1,668 உத்தரவாதங்கள் வழங்கப்பட்டதுடன் அவற்றில் 452 உத்தரவாதங்கள் 1987 இறுதியில் ரூ. 639 இலட்சம் கடன் நிலுவையுடன் வெளிநின்றன. மீளாய்விற்குரிய ஆண்டில் 90 கடன்கள் முழுமையாக மீளப் பெறப்பட்டதுடன் 27 கோரல்கள் தீர்க்கப்பட்டன.

## அட்டவணை 2.5

## மத்தியவங்கிக் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் (1986—1987)
## (1987 திசெம்பர் 31 இல் உள்ளபடி)

(பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயம் | சிறிய அளவுக் கைத்தொழில்கள் | | | | சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்- I | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்–II | | | |
| | 1986 | | 1987 | | 1986 | | 1987 | | 1986 | | 1987 | |
| | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| வழங்கப்பட்ட கடன்கள் ... | 767 | 31.2 | 767 | 31.2 | 1,668 | 286.1 | 1,668 | 286.1 | 1,540 | 782.7 | 2,182 | 1,148.06 |
| உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் ... | 767 | 23.4(அ) | 767 | 23.4(அ) | 1,668 | 157.5(இ) | 1,668 | 157.5(இ) | 1.540 | 406.9(ஈ) | 2,182 | 593.07(ஈ) |
| முழுமையாக மீளச்செலுத்தப்பட்ட கடன்கள் ... | 545 | 19.4 | 561 | 20.5 | 913 | 89.4 | 1,003 | 112.3 | 56 | 8.66 | 67 | 11.28 |
| புறக்கீடு செய்யப்பட்ட / காலங்கடந்த உத்தரவாதங்கள் ... | 62 | 3.6 | 63 | 3.9 | 48 | 12.8 | 48 | 12.8 | 50 | 30.33 | 62 | 35.87 |
| அனுமதிக்கப்பட்ட / தீர்க்கப்பட்ட கோரல்கள் | | | | | | | | | | | | |
| (i) வெளிநிற்கும் கடன்கள் ... | 50 | 2.067 | 55 | 2.203 | 123 | 15.900 | 150 | 19.143 | 1 | 0.060 | 7 | 2.055 |
| (ii) அனுமதிக்கப்பட்ட பொறுப்புக்கள் | 50 | 1.550 | 55 | 1.652 | 123 | 9.541 | 150 | 11.486 | 1 | 0.036 | 7 | 1.233 |
| நிராகரிக்கப்பட்ட கோரல்கள் | | | | | | | | | | | | |
| (i) வெளிநிற்கும் கடன்கள் ... | 2 | 0.22 | 2 | 0.22 | 13 | 4.05 | 15 | 4.98 | 2 | 0.17 | 4 | 0.17 |
| (ii) கோரப்பட்ட தொகை ... | 2 | 0.16 | 2 | 0.16 | 13 | 2.42 | 15 | 2.99 | 2 | 0.1 | 4 | 0.1 |
| வெளிநிற்கும் கடன்கள் ... | 108 | 2.5(ஆ) | 86 | 2.2(ஆ) | 571 | 76.8(ஆ) | 452 | 63.9(ஆ) | i,431 | 490.0(ஆ) | 169.2 | 687.22 (ஆ) |
| (நிலுவையில் உள்ளவை) ... | 105 | (2.4) | 78 | (1.3) | 387 | (48.6) | 354 | (48.7) | 197 | (59.1) | 32.7 | (122.05) |
| வெளிநிற்கும் உத்தரவாதங்கள் ... | 108 | 1.9(அ) | 86 | 1.6(அ) | 571 | 44.1(இ) | 452 | 36.8(இ) | 1,431 | 260.0(ஈ) | 169.2 | 375.41(ஈ) |
| (i) பிற்போடப்பட்ட கோரல்கள் ... | 6 | 0.527 | 4 | 0.438 | 33 | 8,828 | 36 | 10.492 | 4 | 0.890 | 5 | 1.369 |
| (ii) பரிசீலனையின் கீழுள்ளகோரல்கள் ... | 4 | 0.158 | 3 | 0.030 | 49 | 7.601 | 52 | 7.113 | 8 | 3.436 | 18 | 7.283 |
| (iii) கோரல் பொறுப்பு ... | 4 | 0.119 | 3 | 0.023 | 49 | 4.561 | 52 | 4.268 | 8 | 2.062 | 18 | 4.370 |
| கட்டணச் சேகரிப்பு — | — | 0.89 | | 0.91 | | 8.69 | | 10.60 | | 3.39 | | 8.08 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) 75 சதவீதமான வெளிநிற்கும் கடன்கள்
(ஆ) மீளப்பெறப்பட்ட தவணைப்பணம் தவிர்ந்த
(இ) வெளிநிற்கும் 60 சதவீதமான கடன்கள் ஆகக் கூடியது ரூ. 400,000/-
(ஈ) ரூ. 2,000,000 வரையான கடன்களைப் பொறுத்தவரை ஆகக்கூடியது ரூ. 800,000 இனையும் ரூ. 2000 000 இற்கும் ரூ. 400,000 இற்கும் இடைப்பட்ட கடன்களுக்கு ஆகக்கூடியது ரூ. 1,200,000 இனையும் உச்ச எல்லையாகக் கொண்டு வெளிநின்ற கடன்களில் 60 சத வீதம்.
(உ) 87-12-31 இல் பகிர்ந்தளிக்கப்பட்டமைபற்றி குறிப்பிடப்படாத ரூ. 2,270 இலட்சம் கொண்ட 350 கடன்களையும் உள்ளடக்கும்.

ஆண்டின் இறுதியில் ரூ. 487 இலட்சம் தொகை கொண்ட 354 கடன்கள் செலுத்தப்படாமல் இருந்தன. மத்திய வங்கி இத்திட்டத்தின் கீழான 150 கோரல்களைத் தீர்ப்பனவு செய்யும் பொருட்டு நான்கு பங்கு பற்றும் கொடுகடன் நிறுவனங்களுக்கும் மொத்தமாக ரூ. 115 இலட்சங்களை 1987 இன் இறுதியில் செலுத்தியது. ஏறத்தாழ ரூ. 20 இலட்சம் பொறுப்பினைக் கொண்ட இரு கோரல்கள் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக நிராகரிக்கப்பட்ட மொத்தக் கோரல்களின் எண்ணிக்கை 15 ஆகியது. ஆண்டின் இறுதியில் ரூ. 43 இலட்சம் கோரல் பொறுப்பினைக் கொண்ட 52 கோரல்கள் தீர்ப்பனவிற்காகக் காத்திருக் கின்றன. இத்திட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டணம் ஆண்டின் இறுதியில் ரூ. 106 இலட்சமாகவிருந்தது.

**சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் –II**

சிறிய நடுத்தரக் கைத்தொழில் 11 கொடுகடன் உத்தரவாதத் திட்டம் 1982 இல் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழான கடன்களின் பகிர்ந்தளிப்பு 1987 இல் முடிவுற்றதுடன் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்கள் அவற்றின் கடன் வழங்கலை விரைவுபடுத்தியமையின் விளைவாக இவ்வாண்டுக் காலத்தில் ரூ. 3,654 இலட்சம் கடன் பெறுமதி கொண்ட உத்தரவாத விண்ணப்பங்கள் (642) அதிகரித்ததுடன் சிறிய நடுத்தர கைத்தொழில் திட்டம்—11 இன் கீழ் வழங் கப்பட்ட உத்தரவாதங்களின் மொத்த எண்ணிக்கை 2,182 இற்கு உயர்ந்தது. ஆண்டின் இறுதியில் ரூ. 113 இலட்சம் மொத்தப் பெறுமதி கொண்ட 67 கடன்கள் முற்றாக மீளப் பெறப்பட்டதுடன் வெளி நின்ற 1,692 கடன்களில் ரூ. 1,220.5 இலட்சம் கடன் நிலுவை கொண்ட 327 கடன்கள் நிலுவையில் இருந்தன. 1987 இறுதியில் ஐந்து பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களுக்கு ரூ. 12 இலட்சங்களை வழங்கி மத்திய வங்கி இத்திட்டத்தின்கீழ் 7 கோரல்களைத் தீர்ப்பனவு செய்தது. வெளிநிற்கும் 1,692 சிறிய நடுத்தரக் கைத்தொழில்—11 கடன்களில் ரூ. 1,220 இலட்சம் கடன் பெறுமதியையும், ரூ. 730 இலட்சம் உத்தரவாதப் பெறுமதியையும் கொண்ட 327 கடன்கள் நிலுவையில் இருந்தன. இது இத்திட்டத்தின் கீழான மத்திய வங்கியின் ஆகக் கூடிய பொறுப்பினைப் பிரதிபலித்தது. திட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்ட கட்டணம் ரூ. 80 இலட்சங் களாக இருந்தது. சிறிய நடுத்தரக் கைத்தொழில்—11 இன் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு ஒன்று அட்டவணை 2.6 இல் காட்டப்பட்டுள்ளது.

**செயற்றிட்டங்களைப் பின் தொடர்தலும் பரிசோதித்தலும்**

செயற்றிட்டங்களின் செயலாற்ற மட்டங்களை மதிப்பிடும் பொருட்டு நடுத் தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் மற்றும் சிறிய–நடுத்தரக் கைத்தொழில் திட்டங்களின் கீழ் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் பின் தொடர் வேலைகளும் பரிசோதித்தலும் 1987 இலும் தொடர்ந்தன. பின் தொடர் வேலைகள் சரியான நடவடிக்கைகள் எங்கு தேவை என்பதனை இனங் காண்பதற்கு மத்திய வங்கியை இயலச் செய்தன. 1987 ஆம் ஆண்டில் பரிசோதிக்கப்பட்ட 87 சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டங்களில் பெரும்பாலானவை கொழும்பு, கம்பகா, களுத்துறை மாவட்டங்களிலேயே அமைந்திருந்தன.

அட்டவணை 2.6

### கடன்களின் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு
### சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் II

தொகை ஆயிரம் ரூபாய்களில்

| கைத்தொழில் | 1982 – 1987 | | | 1987 | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை |
| 1. உணவு பதப்படுத்தல் ... | 714 | 371,953 | 189,911 | 223 | 114,278 | 57,411 |
| 2. ஏனைய வேளாண்மைக் கைத்தொழில்கள் ... | 45 | 18,903 | 10,222 | 10 | 4,290 | 2,574 |
| 3. இறப்பர் உற்பத்திகள் ... | 67 | 49,671 | 24,923 | 11 | 11,205 | 4,963 |
| 4. உலோக உற்பத்திகள் ... | 216 | 93,781 | 48,119 | 60 | 29,651 | 15,430 |
| 5. கட்டடப் பொருட்கள் ... | 142 | 80,709 | 44,031 | 37 | 19,588 | 11,193 |
| 6. கட்டடவாக்க ஒப்பந்தம் ... | 19 | 25,400 | 12,320 | 11 | 13,325 | 6,535 |
| 7. மர உற்பத்திகள் ... | 150 | 50,674 | 28,249 | 37 | 13,379 | 7,627 |
| 8. ஆடைகள் ... | 111 | 48,155 | 25,368 | 24 | 17,013 | 7,900 |
| 9. புடவைகள் ... | 50 | 39,613 | 20,625 | 18 | 19,257 | 9,357 |
| 10. தொழிற்கூடத்திருத்தல் ... | 85 | 32,126 | 1,849 | 22 | 7,471 | 4,483 |
| 11. ஏனையவை ... | 583 | 337,074 | 170,456 | 189 | 117,444 | 59,300 |
| மொத்தம் ... | 2,182 | 1,148,059 | 593,073 | 642 | 366,901 | 186,773 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## கிராமியக் கொடுகடன்

முந்திய ஆண்டுகளைப் போன்று 1987 ஆம் ஆண்டிலும் நாட்டின் கிராமியக் கொடுகடனை ஊக்குவிப்பதில் மத்திய வங்கி தீவிரப் பங்கினை வகித்து வந்தது. வங்கியின் நடவடிக்கைகள் தேசிய கொள்கை நெறிமுறைகளைத் தயாரித்தல், கொடுகடன் திட்டங்களைக் கண்காணித்தல், மேற்பார்வை செய்தல், மதிப்பிடல், தாக்கமான கிராமியக் கொடுகடன் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய நிறுவகரீதியான உள்ளமைப்பினை அபிவிருத்தி செய்தல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

கிராமியக் கொடுகடன் மதியுரைச் சபை 1987 இல் 7 கூட்டங்களை நடாத்தியது. முதற் தடவையாகச் சபை கொழும்பிற்கு வெளியே கூட்டத்தை நடாத்தியது. வருகைதரும் வேளையில் கடுமையான வரட்சியை அனுபவித்துக் கொண்டிருந்த புத்தளம் மாவட்டத்திலுள்ள நிக்கவரட்டிய தேர்தற் தொகுதிக்கு வருகை தந்தமையுடன் கூட்டம் ஒன்றுபட்டமைந்தது. சபை பல்வேறு இடங்களிலுள்ள வேளாண்மையாளர்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடியது. நாட்டின் கிராமியக் கொடுகடனை ஊக்குவிப்பது தொடர்பான பல முக்கிய விடயங்கள் சபையின் கூட்டங்களின்போது கலந்துரையாடப்பட்டன. சபையின் கவனத்தில் ஈடுபாடு கொண்டிருந்த விடயங்களில் ஒன்று தேயிலைத்துறைக்கான குறிப்பாக விலைகளின் ஒழுங்கற்ற போக்கினால் கடுமையான பிரச்சினைகளை அனுபவித்த சிறு உடமையாளர்கள், தனியார் தேயிலைச் சொந்தக்காரர் ஆகியோருக்கான கொடுகடன் ஒதுக்காகும். இத்துறைக்குச் சிறப்பான

உதவி தேவையென்பது சபையினுல் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுத் தேயிலைத்துறைக்கு அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் அமைப்பு ஒன்றைத் தயாரிக்கும்படி இது மத்திய வங்கியை வேண்டியது. இவ்வாண்டில் தேசிய மின்சக்தி இணைப்புக்களிலிருந்து மின்வலுவைப் பெறுத நாட்டின் பின்தங்கிய பிரதேசங்கள் நன்மையடையும் பொருட்டுக் கிராமிய மின்னூட்டலில் சூரிய ஒளி சக்தியினைப் பயன்படுத்துவதனைப் பிரபல்யப்படுத்துவதற்கான கொடுகடன் திட்டத்தினையும் சபை கவனத்திற் கொண்டதுடன் விலங்குகளின் தரத்தினை உயர்த்துவதற்கான பணிப் பண்ணைகளை நிறுவுவதன் மூலம் களுத்துறை மாவட்டத்தில் பாற்பண்ணைத் தொழிலை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் பற்றியும் கலந்துரையாடப் பட்டது. பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமளிக்கும்படி அநுராதபுர பால் உற்பத்தியாளர் சங்கத்திடமிருந்து கிடைத்த வேண்டுகோளும் 1987 இல் சபை யின் கவனத்தை ஈர்த்தது. மேலும் செவனகலவில் உள்ள கரும்புச் செய்கை யாளருக்கான கொடுகடன் வழங்கும் திட்டத்தினையும் இலங்கை எண்ணெய் கூட்டுத்தாபனத்தினுல் கொள்வனவு செய்யப்படும் சோயா அவரை, சோளம் ஏனைய பருப்பு வகைகளுக்கான கொடுகடனை ஊக்குவிப்பதற்கான திட்டத்தினையும் சபை மீளாய்வு செய்தது.

மத்திய வங்கி 1987 இலும் தொடர்ந்து புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. புதிய அனைத்தை யும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன் களின் மொத்த அளவு 1986 சிறுபோகத்தின் ரூ. 1,510 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1987 சிறுபோகத்தில் ரூ. 1,240 இலட்சமாக விளங்கியது. 1986–87 பெரும்போகத்தில் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி ரூ. 2,570 இலட்சமாகும். இது 1985/86 பெரும்போகத்தில் வழங்கப்பட்ட ரூ. 1,160 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் முன்னேற்றமான ஒன்ருகும். 1986/87 பெரும்போகத்தில் வேளாண்மைக் கடன்களைப் பெற்ற 41,390 வேளாண்மை யாளரில் 1,920 வேளாண்மையாளர் இயற்கைக் காரணங்களினுல் ஏற்பட்ட பயிர் அழிவிற்காகப் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மீள அட்டவணையிடப்பட்ட வசதியினை நாடினர். மீள அட்டவணையிடப்பட்ட கடன்களின் தொகை ஏறக்குறைய ரூ. 70 இலட்ச மாகும். 1986 சிறுபோகத்தில் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பான கொடு கடன் உத்தரவாதம் 1987 இல் மீண்டும் ஆரம்பித்தது. வங்கிகளின் மொத்தக் கோரல் ரூ. 123 இலட்சமாகும். இதில் கொடுகடன் உத்தரவாதத்தினை நிருவகிக் கும் நியதிகளின்படி ரூ. 61 இலட்சம் அல்லது 50 சதவீதம் கோரலின் முதலாவது கட்டணமாக மத்திய வங்கியினுல் செலுத்தப்பட்டது. மீதித் தொகை நிலுவையி லுள்ள கடன்களை மீளப் பெறுதல் தொடர்பான சட்டரீதியான தேவைகளுக்கு வங்கிகள் இசையும்போது செலுத்தப்படும்.

இத்திட்டம் செயற்படும்போது பெறப்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் இவ்வாண்டில் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத் தில் குறிப்பிட்ட சில திட்டங்களும் மாற்றங்களும் புகுத்தப்பட்டன. கிளை முகாமையாளர்கள் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் தமது சுயவிருப்பின் பேரில் கடன்களை வழங்குவதற்கான பிணைபற்றி வலியுறுத்தும் தேவையினை நிருவகிக்க அனுமதிக்கப்பட்டனர். நிலுவை யில் உள்ள வேளாண்மைக் கடன்களை மீள அட்டவணையிடல் தொடர்பான சில விதிகள் தளர்த்தப்பட்டன. மீண்டெழும் பயிர் இழப்புக்களைப் பொறுத்தவரை கடன் பெறுவோர் தொடர்ச்சியாக இரு கடன்களை மீள அட்டவணையிடுவதற்கு

## நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் வகை I இன்

| கொடுகடன் திட்டத்தின் பெயர் | மீள் நிதியிடல் ஒதுக்கீடுகள் (ரூ.ப.இ.) |
|---|---|
| **அ. 1987ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கொடுகடன் திட்டங்கள்** | |
| 1. தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம் ... ... | 55.00 |
| 2. கடற்றொழில் துறை வங்கி நிதியிடல் திட்டம் ... ... | 140.00 |
| 3. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் நிறுவப்படும் வளமாக்கி களஞ்சியங்களுக்கான கொடுகடன் திட்டம் ... ... ... | 14.00 |
| 4. கடற்றொழில் கூட்டுறவு நிலையங்களுக்கான கொடுகடன் திட்டம் ... | 42.00 |
| 5. மாத்தளை, புத்தளம் மாவட்டங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம் ... ... ... | 54.79 |
| 6. யாத்தறை மாவட்டத்தில் இளைஞர் சுயதொழில் வாய்ப்புக் கிராம ஏற்புத் திட்டம்... | 18.20 |
| 7. ஆசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை கிராமியக் கொடுகடன் செயற்றிட்டக் கடன் திட்டம் | 137.00 |
| 8. தேயிலை சிறு உடைமையாளர்களுக்கான வளமாக்கிக் கொடுகடன் திட்டம் ... | 7.50 |
| 9. இலங்கை கிராமிய கொடுகடன் திட்டத்திற்குள் அடங்காத மாவட்டங்களில் சுமை இழுக்கும் விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு நிதியிடுவதற்கான கொடுகடன் திட்டம் ... ... ... | 5.60 |
| 10. அநுராதபுர மாவட்டத்தில் கிராம ஏற்பு சுய வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அடையாளம் காணப்பட்ட செயற்றிட்டங்களுக்கு நிதியிடலுக்கான கொடுகடன்திட்டம்... | 12.00 |
| 11. பயிரிடுகைக்கு முன்னை விதை உருளைக் கிழங்கு சிறு களஞ்சியங்களின் கட்டட வாக்கத்திற்கான கொடுகடன் திட்டம் ... ... | 1.00 |
| 12. பதுளை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி செயற்றிட்டம் ... | 7.00 |
| 13. மாதல் மீன்பிடிக்கான கொடுகடன் திட்டம் (கரையோர பாரவலை மீன்பிடி) ... | 5.00 |
| 14. பெல்வத்தை சீனிச் செயற்றிட்டத்தின்கீழ் கரும்பினை பயிரிடும் குடியிருப்பாளர்களுக்கான கொடுகடன் திட்டம் ... ... | 66.00 |
| 15. வவுனியா, மன்னார் மாவட்டங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமியஅபிவிருத்தி செயற்றிட்டம் ... ... ... | 32.00 |
| 16. செவனகல, இங்குரான, கந்தளாய் சீனி செயற்றிட்டத்தில் கரும்பினைப் பயிரிடும் சிறு வேளாண்மையாளர்களுக்கு உதவும் கொடுகடன் திட்டம் ... | 120.60 |
| 17. இறம்புக்கனைப் பிரதேசத்தில் இடைப் பயிர்ச் செய்கையுடன் மீள் நடுகை நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்வதற்காக தெங்கு வளர்ப்போருக்கு உதவுவதற்கான இலங்கை —ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெங்கு அபிவிருத்தி செயற்றிட்ட கொடுகடன் திட்டம் | 8.00 |
| 18. விக்டோரியா செயற்றிட்டத்தின்கீழ் இடம்பெயர்ந்த வர்த்தகர்கள் வர்த்தக கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கான கொடுகடன் திட்டம் ... | 22.00 |
| 19. நாடு முழுவதற்குமான பண்ணைப் பொறித் தொகுதிக்கடன் திட்டம் ... | 106.99 |
| 20. உணவு வேளாண்மை அமைப்பு/மாதர் பணியக செயற்றிட்டத்தின்கீழ் வருமான உருவாக்க நடவடிக்கைகளில் பெருந்தோட்டத்துறைப் பெண்களுக்கு உதவுவதற்கான சிறப்புக் கொடுகடன் திட்டம் ... | 1.00 |
| 21. குருநாகல், கொழும்பு,கம்பகர மாவட்டங்களில் சீன இஞ்சி, அன்னாசி, பாசன் பழங்களை பயிரிடுவதற்கான கொடுகடன் திட்டம் ... | 32.00 |
| 22. அநுராதபுரம் உலர்வலய வேளாண்மைச் செயற்றிட்டக் கடன் திட்டம் ... | 22.30 |
| 23. இலங்கை ஆசிய அபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்தி செயற்றிட்டம் | 68.20 |
| 24. கண்டி, கேகாலை, மாத்தளை மாவட்டங்களிலுள்ள சுய தொழில் வாய்ப்பு மற்றும் ஏனைய நடுத்தரப்பண்ணைச் செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்கான திட்டம் | 6.00 |
| 25. பாற்பண்ணை அபிவிருத்திக்கான கொடுகடன் திட்டம் ... | 20.60 |
| 26. களுத்துறை, குருநாகல் மாவட்டங்களில் சுயதொழில் வாய்ப்பினை ஊக்குவிப்பதற்கான கொடுகடன் திட்டம் ... | 20.00 |
| 27. கிணற்று நீர்ப்பாசன நோக்கங்களுக்கு குழாய கிணறுகளை அமைப்பதற்கான கொடுகடன் திட்டம் | 1.10 |
| **ஆ. 1987ஆம் ஆண்டுப் பகுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் திட்டங்கள்** | |
| 1. கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் ... | 50.00 |
| 2. பெல்வத்தை சீனிச் செயற்றிட்டத்தின் கீழ் கரும்புப் பயிர்ச்செய்கைக்காக வெளியிலுள்ள பயிர்ச்செய்கையாளருக்கான கொடுகடன் திட்டம். ... | 39.3 |
| மொத்தம் | 1115.18 |

அட்டவணை 2.7

## கீழ் மீள் நிதியிடுவதற்கு ஒப்புதலளிக்கப்பட்ட கடன் திட்டங்கள்

| 31. 12. 87 இல் பயன்படுத்தப்பட்ட தொகை (ரூ. ப. இ.) | 31. 12. 87 இல் பயன்படுத்தப்படாத தொகை (ரூ. ப. இ.) | செயற்றிட்டம் தொடங்கிய நாள் | ஒதுக்கீடுகளின் பகிர்ந்தளிப்புக் காலப் பகுதி (ஆண்டுகள்) |
|---|---|---|---|
| 49.96 | 5.04 | 26. 03. 79 | 3 |
| 114.98 | 25.02 | 02. 07. 79 | 3 |
| 9.14 | 4.86 | 13. 10. 80 | 1 |
| 1.28 | 40·72 | 28. 04. 81 | 2 |
| 53.84 | 0.95 | 08. 05. 81 | 6 |
| 8.94 | 9.26 | 10. 04. 81 | — |
| 82.31 | 54.69 | 01. 07. 82 | 5 |
| 1.36 | 6.14 | 11. 08. 82 | 1 |
| 0.01 | 5.59 | 10. 09. 82 | 2 |
| 6.27 | 5.73 | 14. 10. 82 | — |
| ... | 1.00 | 01. 03. 83 | 1 |
| 3.83 | 3.17 | 27, 09. 83 | 5 |
| 0.89 | 4.11 | 26. 04. 84 | 1 |
| 9.88 | 56.12 | 10. 05. 84 | 6 |
| 0.70 | 31.30 | 14. 06. 84 | 4 |
| 15.51 | 105.09 | 20. 09. 84 | 5 |
| 0.10 | 7.90 | 26. 12. 84 | 3 |
| — | 22.00 | 11. 03. 85 | 2 |
| 48.25 | 58.74 | 26. 03. 85 | 2 |
| 0.31 | 0.69 | 31. 12. 85 | 1 |
| 3.95 | 28.05 | 27. 06. 85 | 3 |
| 2.47 | 19.83 | 02. 07. 85 | 3 |
| 1.14 | 63.06 | 01. 03. 86 | 3 |
| 1.75 | 4.25 | 01. 03. 86 | — |
| 2.51 | 18.09 | 16. 04. 86 | 3 |
| 14.66 | 5.34 | 15. 05. 86 | — |
| 0.11 | 0.99 | 08. 09. 86 | 2 |
| — | 50.00 | 15. 01. 87 | 6 |
| — | 39.3 | 07. 08. 87 | 7 |
| 434.15 | 681.03 | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அனுமதிக்கப்பட்டு அதன்படி அவர்களது வேளாண்மைத் தொழிற்பாட்டினைத் தொடர்ந்து நடாத்துவதனை உறுதிப்படுத்தும் வகையில் மூன்ருவது கடனையும் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாகத் தொடர்ந்துமிருக்கச் செய்யப்பட்டது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியும் 1987 இல் பங்களிக்கும் வங்கியாக இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டது. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தில் பங்குபற்றுவதற்காகப் பதிவு செய்த சிக்கன, கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை இவ்வாண்டில் 20 இலிருந்து 29 ஆக அதிகரித்தது.

இலங்கை எண்ணெய், கொழுப்புக் கூட்டுத்தாபனத்தினுல் கால்நடைத் தீனையும் தாவர எண்ணெயையும் உற்பத்தி செய்வதற்குத் தேவையான சோளம், சோயா அவரை பருப்பு ஏனைய குறைந்த தரமுடைய தானியங்களின் கொள்வனவிற்கு நிதியிடலுக்கான சந்தைப்படுத்தல் கடன் திட்டம் 1987 இல் நடைமுறையில் இருந்ததுடன் இவ்வாண்டில் ரூ. 750 இலட்சம் கடன்களாக வழங்கப்பட்டது. எனினும் பண்ணை வாசலிலேயே உத்தரவாத விலை செலுத்தப்பட வேண்டியதனை உறுதிப்படுத்த வேண்டுமென்ற திட்டத்தின் குறிக்கோளை இலங்கை எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம் தொழிற்படுத்தத் தவறியமையினுல் இக்குறிக்கோளை எய்துவதில் தொடர்பான முகவர் நிலையங்கள் நீண்டகாலத் தீர்வினை உருவாக்கும்வரை இத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

ஆய்வுக்குரிய ஆண்டில் கிராமியத்துறைக்கு நடுத்தர நீண்டகாலக் கொடுகடனை வழங்குவதற்காக இரு புதிய கொடுகடன் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ்க் கொடுகடன் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. கடன் பெறுகைகளில் ரூ. 500 இலட்சங் கொண்ட தொகை நெற்பயிர்ச்செய்கை, துணை உணவுப் பயிர்களும் வாழையும், பண்ணை முதலீடுகள் (பாற்பண்ணை, சிறு ஏற்றுமதிப் பயிர் பயிரிடல், தெங்கு வளமாக்கி, பண்ணைப் பொறிகளும் துணைக்கருவிகளும்) குடிசைக் கைத்தொழிலும் சிறு அளவிலான கைத்தொழில்களும் போன்ற நடவடிக்கைக்காக வங்கிகளில் மேற்கொள்ளப்படும் கடன் வழங்கலுக்கு உதவுவதற்காகச் செய்யப்பட்டது. 1987 இல் அறிமுகம் செய்யப்பட்ட மற்றைய புதிய திட்டம் பெல்வத்தை சீனி செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்படாத கரும்புப் பயிரிடுவோருக்கான கொடுகடன் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ்ச் செயற்றிட்டத்திற்கு வெளியே பயிரிடுவோருக்கு இலங்கை வங்கியினுல் வழங்கப்படும் துணைக்கடனில் 100 சதவீதங் கொண்ட அளவுக்கு மத்திய வங்கி கடன்களை மீளளிப்புச் செய்தது. இத்திட்டத்திற்காக மத்திய வங்கியினுல் ரூ. 393 இலட்சங் கொண்ட தொகை ஒதுக்கப்பட்டது.

1987 இல் நடைமுறையில் உள்ள கொடுகடன் திட்டத்தில் பல்வேறு விரிவாக்கங்களும் திருத்தங்களும் செய்யப்பட்டன. 1987 இல் முற்றுப்பெறுவதாக அட்டவணையிடப்பட்ட பதுளை ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி வங்கிக் கடன் திட்டமும் மாத்தளை—புத்தளம் மாவட்டங்களின் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி வங்கிக் கடன் திட்டமும் இத்திட்டங்களின் கீழ் கிடைக்கத்தக்கதாகவிருந்த பயன்படுத்தப்படாத மூலவளங்களின் உபயோகத்திற்கு உதவும் வகையில் ஒரு வருடத்திற்கு மேலும் விரிவாக்கப்பட்டன. வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் தோட்டத்துறைப் பெண்களுக்கு உதவும் பொருட்டுக் கொடுகடன் திட்டத்தினை நிறுத்தும் நாளும் 1987 இலிருந்து 1988 இறுதி வரை நீடிக்கப்பட்டது.

தனி நபர் ஒவ்வொருவரும் வைத்திருக்கக் கூடிய உடமையின் ஆகக் கூடிய அளவு 50 ஏக்கர்களை விஞ்சாதவிடத்துத் தனிப்பட்ட கூட்டு நிலையங்களினுல் கூட்டாகச் சொந்தமாக்கப்படும் அல்லது நிருவகிக்கப்படும் உடமைகளைத் தெங்கு வளமாக்கிக் கொடுகடன்திட்டத்தின்கீழ் 50 ஏக்கருக்கும் கூடுதலான வைத்திருப் பதற்கு இயலச் செய்யும் வகையில் வங்கி தகைமை விதிகளை மீளாய்வு செய்தது. இலங்கை—ஆசிய அபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டத்தினைப் பொறுத்தவரை கால்நடை உற்பத்தியாளர் சங்கங்கள் தொடர்பான செயற் றிட்டத்தின் கூறு 1987 இல் தொழிற்பாட்டிற்கு வந்தது.

பூர்த்தியடைந்த அல்லது பங்குபற்றும் வங்கிகளிடமிருந்து கேள்வி எழாத பல கொடுகடன் திட்டங்கள் நிறுத்தப்பட்டன. இவை ஒக்கிட் பயிர்ச்செய்கைக் கான கொடுகடன் திட்டம் (இலங்கை வங்கி—வரையறுக்கப்பட்ட இலங்கைப் புகையிலைக் கூட்டு நிலையம்) குள நீர்ப்பாசனம், நவீன மயப்படுத்தல் செயற் றிட்டம், குருநாகல் மாவட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான பண்ணைப் பொறித்தொகுதிக் கடன் திட்டம், அபுதாபி யினுல் நிதியிடப்பட்ட வடமேற்குக் கரையோரக் கடற்றெழில் அபிவிருத்திச் செயற்றிட்டம், ஒக்கிட் பயிர்ச்செய்கையின் கொடுகடன் திட்டம் (மக்கள் வங்கி— சர்வோதயம்—லக்மல்சல) காற்ருடி ஆலைகளுக்கு நிதியிடுவதற்கான கொடுகடன் திட்டம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. சம்மாந்துறைத் தேர்தல் தொகுதியில் உள்ள பாற்பண்ணை அபிவிருத்தி (முன்னேடி) செயற்றிட்டத்திற்கான கடன் திட்டமும், உயிரியல் வாயு பொறித்தொகுதியை நிறுவுவதற்காக மினிப்பே திட்டத்தில் குடியேறியவர்களுக்கு உதவுவதற்கான கொடுகடன் திட்டமும் நாடு பூராவுமான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்துடன் ஒன்றிணைக்கப் பட்டன.

மத்திய வங்கியின் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் வகை 1 இலிருந்து மீள் நிதியிடப்பட்டு உதவப்படும் நடைமுறையிலுள்ள நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் திட்டத்தின் செயற்பாட்டின் முன்னேற்றம் அட்டவணை 2.7 இல் தரப்பட்டுள்ளது.

1987 இல் 29 நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் திட்டங்கள் தொழிற் பாட்டில் இருந்ததுடன் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பான மீள் நிதியிடலுக்காக ரூ. 11,150 இலட்சம் ஒதுக்கப்பட்டது. பங்குபற்றும், வங்கிகளினுல் இத்திட்டத்தின் கீழ்ப் பயன்படுத்தப்பட்ட மீள் நிதியிடலின் மொத்த அளவு ஆண்டின் இறுதியில் ரூ. 4,340 இலட்சமாக அல்லது மொத்த ஒதுக்கில் 39 சதவீதமாக விளங்கியது. இவ்வாண்டில் திருப்திகரமான பயன் பாட்டு வீதத்தினைக் காட்டும் திட்டங்களில் சிலவாகத் தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம் (62 சதவீதம்), மாத்தளை—புத்தளம் ஒருங்கிணைந்த கிரா மிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டக் கொடுகடன் திட்டம் (75 சதவீதம்), நாடு பூராவுமான பண்ணைப் பொறித்தொகுதிக் கடன் திட்டம் (59 சதவீதம்), அநுராதபுரம் (1987 நவெம்பர் இறுதியில். 100 சதவீதம்), மாத்தறை (100 சதவீதம்), களுத்துறை, குருநாகல் (73 சதவீதம்) மாவட்டங்களில் உள்ள சுயதொழில் கொடுகடன் திட்டங்கள் என்பன விளங்கின. அநுராதபுர சுய தொழில் வாய்ப்புத் திட்டத்திற்கான ஒதுக்கு 1987 இல் முடிவடைந்து ஆண்டின் இறுதியில் ரூ. 60 இலட்சங் கொண்ட புதிய ஒதுக்குச் செய்யப்பட்டது. இவ்வாறே 1987 இன் பிற்பகுதியில் மாத்தறை சுயதொழில் வாய்ப்புத் திட்டத்திற்காகப் புதிதாக ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டது. நாடு பூராவுமான பண்ணைப் பொறித்தொகுதிக் கடன் திட்டத்திற்கான மீள் நிதியிடல் ஒதுக்கும் இவ்வாண்டில் ரூ. 200 இலட்சத்தினுல் அதிகரிக்கப்பட்டது.

கடந்த காலத்தின் மீளப் பெறுகைகளின் குறைவான வீதங்கள் காரணமாகக் கடற்றொழில் துறைக்குக் கடன் வழங்குவதில் முந்திய ஆண்டுகளைப் போன்று வங்கிகள் தயக்கம் காட்டின. கடற்றொழில்துறை வங்கிக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கு மத்திய வங்கி மீள் அட்டவணையிடல் திட்டமொன்றை அறிமுகம் செய்தது. இது இத்தகைய கடன்களைச் செலுத்தத் தவறும் சந்தர்ப்பங்கள் கூடுதலாக அமைந்தமையினால் ஏற்பட்ட பிரச்சினைகளை எதிர் நோக்குவதற்கு வங்கிகளுக்கு உதவும் நோக்குடன் செய்யப்பட்டது.

கிராமியத் துறைக்கான முதலீட்டுக் கொடுகடன்களில் ஏற்படக்கூடிய இழப்புக்களுக்கெதிராக ஓரளவு பாதுகாப்பை வழங்கிக் கடன் வழங்கும் வங்கிகளுக்கு உதவும் நோக்குடன் 1987 இல் மத்திய வங்கி பல் குறிப்பிட்ட நடுத்தர நீண்ட காலக் கொடுகடன் திட்டங்களையும் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவரத் தீர்மானித்தது. ஆரம்பத்தில் நாடு பூராவுமான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டம், இலங்கை—ஆசிய அபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன் திட்டம் என்பன கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. குறுகிய கால பயிர்ச்செய்கை நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களுக்கு உத்தரவாதம் அளிப்பதற்காக மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரூ. 3,000 இலட்சங் கொண்ட ஆரம்ப உதவு தொகையுடன் 1985 இல் ஆரம்பிக்கப்பட்ட கொடுகடன் உத்தரவாத நிதியம் குறிப்பிடப்பட்ட நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் திட்டத்தின் கீழ்வழங்கப்பட்ட நடுத்தர நீண்டகாலக் கடன்களுக்கும் உத்தரவாதம்அளிப்பதற்கான பொது நிதியமாகச் செயற்படும்.

பல்வேறு மாவட்டங்களில் உள்ள சிறு வேளாண்மையாளருக்கும் காணியற்றோருக்குமான கிராமியக் கொடுகடன் திட்டத்தினை இனங் காண்பதற்கும், மதிப்பிடுவதற்கும், உருவாக்குவதற்குமென 1987 இல் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்திலிருந்து பல தூதுக் குழுக்கள் வருகை தந்தன. 1987 யூலையில் இலங்கை அரசாங்கத்திற்கும் வேளாண்மை அபிவிருத்திப் பன்னாட்டு நிதியத்திற்குமிடையே தயாரிக்கப்பட்ட விளக்க அமைப்பு விதி கடன் மதிப்பீட்டிற்கான ஒரு அடிப்படையாக அமைந்தது. செயற்றிட்டத்திற்கான கடன் பேச்சு வார்த்தைகள் 1988 இல் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கிராமியக் கொடுகடன் நிலைகளை ஆராய்ந்து முன்னேற்றங்களுக்கான விதந்துரைப்புக்களை எடுத்துரைக்கும் நோக்குடன் இலங்கை அரசினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் வேண்டுகோளின்பேரில் உணவு வேளாண்மை அமைப்பின் முதலீட்டு நிதியத்திலிருந்து ஒரு தூதுக்குழு 1987 இல் வருகை தந்தது.

இவ்வாண்டில் மத்திய வங்கி 4 இலங்கை வங்கிக் கிளைகளினதும், 4 மக்கள் வங்கிக் கிளைகளினதும், 3 கூட்டுறவுக் கிராமிய வங்கிகளினதும், குருநாகலை மாவட்டப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினதும் வேளாண்மைக் கடன் பட்டியலைப் பரீட்சித்து முடித்தது. இவ்வங்கிக் கிளைகள் மாத்தளை, பதுளை, கம்பகா, குருநாகலை மாவட்டங்களில் அமைந்திருந்தன. அவதானிக்கப்பட்ட குறைபாடுகளை நிவிர்த்தி செய்வதற்கும் கிராமியக் கடன்களை முன்னேற்றுவதற்கும் வேண்டிய நடவடிக்கை நெறிகளை விதந்துரைத்துத் தொடர்பான வங்கிகள், மாவட்ட—பிரதேச அலுவலகங்கள், பரீட்சிக்கப்பட்ட கிளைகள் என்பவற்றின் தலைமை அலுவலகங்களுக்குப் பரீட்சிப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. பரீட்சிக்கப்பட்ட வங்கிக் கிளைகளிலிருந்து இசைவறிக்கைகளைப் பெறுவதற்கு வங்கி இப்பரீட்சிப்புக்களைத் தொடர்ந்தும் நடத்தியது.

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்

1987 இல், கேகாலே, புத்தளம், காலி, கண்டி ஆகிய மாவட்டங்களில் 4 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டமையுடன் தொழிற் பாட்டிலுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 1987 இறுதியில் 9 ஆகியது. அட்டவணை 2.8 இல் காட்டப்பட்டவாறு மீளாய் விற்குரிய ஆண்டில் 29 புதிய கிளைகளைத் திறந்ததுடன் இந்த 9 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் அவற்றின் கிளை வலையமைப்பினை 61 இற்கு விரிவாக்கிக் கொண்டன.

1987 ஆம் ஆண்டில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் நடவடிக்கை களில் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் காணப்பட்டது. 1986 ஆம் ஆண்டின் இறுதி நிலையுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுக் காலத்தில் வைப்புக்களின் திரட்டல் இரு மடங்கிற்கும் கூடுதலான அதிகரிப்பினை எடுத்துக் காட்டிய வேளையில் கடன் வழங்கல் ஏறத்தாள ஒன்றரை மடங்கால் அதிகரித்தது. பல வங்கிகளினால் நகை அடைவு வைத்தலும், நடைமுறைக் கணக்குத் தொழிற்பாடுகளும் அறிமுகப்படுத் தப்பட்டதுடன் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் நடவடிக்கைகளின் பன்முகப்படுத்தல் குறிப்பிடத்தக்க அளவில் காணப்பட்டது.

அட்டவணை 2.8

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளை அமைப்பு

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர் | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி நிறுவிய திகதி | தலைமை அலுவலகம் | திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை | | | 1987 இறுதியில் உள்ள மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | 1985 | 1986 | 1987 | |
| களுத்துறை | 13.07.85 | புளத்சிங்கள | 04 | 03 | 04 | 11 |
| மாத்தறை | 28.07.85 | எட்டியான | 05 | 02 | — | 07 |
| குருநாகல் | 10.08.85 | குளியாப்பிட்டி | 06 | 04 | 02 | 12 |
| அநுராதபுரம் | 12.08.85 | மிகிந்தல | 02 | 04 | 01 | 07 |
| அம்பாந்தோட்டை | 13.12.86 | அம்பாந்தோட்டை | — | 02 | 02 | 04 |
| கேகாலே | 08.02.87 | கெட்டிமுல்லே | — | — | 08 | 08 |
| புத்தளம் | 11.07.87 | சிலாபம் | — | — | 05 | 05 |
| காலி | 18.08.87 | எல்பிட்டிய | — | — | 01 | 01 |
| கண்டி | 03.10.87 | கம்பளை | — | — | 06 | 06 |
| மொத்தம் | | | 17 | 15 | 29 | 61 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1987 திசெம்பர் 31 இல் 9 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினுல் திரட்டப்பட்ட வைப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூ. 530 இலட்சங்களை அடைந்து 87,978 வைப்புக்களை உள்ளடக்கியிருந்தது. ஒப்பிடுகையில் 1986 இறுதியில் இவை முறையே ரூ. 210 இலட்சமாகவும், 41,174 வைப்புக்களாகவும் இருந்தன. சேமிப்பு வைப்புக்கள் நிலையான வைப்புக்கள் இரண்டினையும் ஒன்ருக நோக்குமிடத்து வைப்புக்களின் சராசரிப்பெறுமதி 1986 இன் ரூ. 501 இலிருந்து 1987 இல் ரூ. 602 இற்கு அதிகரித்தது. பெறுமதி நியதிகளில் மொத்த வைப்புக்களின் உள்ளமைப்பு 83 சதவீதத்திற்கும் கூடுதலானவை சேமிப்பு வைப்புக்களில் இருந்தமையினையும் மிகுதியான ஏறத்தாள 17 சதவீதம் நிலையான வைப்புக்களில் இருந்தமையினையும் எடுத்துக் காட்டியது. வைப்புக்களின் எண்ணிக்கை நியதிகளில் 87,312 அல்லது 99 சதவீதம் சேமிப்புக் கணக்குகளைப் பிரதிபலித்தன. இதனை 1987 இல் 9 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் பணியைப் பெற்ற வாடிக்கையாளர்களின் மொத்த எண்ணிக்கைக்கான பதிலீடாகவும் கருதமுடியும். அட்டவணை 2.9 ஒவ்வொரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினுலும் திரட்டப்பட்ட சேமிப்பு, நிலையான வைப்புக்கள் தொடர்பான விபரமான தகவல்களைத் தருகின்றது.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொழிற்பாடுகள் 1986 இல் 8,243 கடன்களிலிருந்து 1987 இல் 13,801 கடன்களுக்கு விரைவாக அதிகரித்தது. 1987 இல் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் பெறுமதி ரூ. 961 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் நிலையுடன் இருந்த நிலைமையுடன் ஒப்பிடுகையில் இது 47 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கை 67 சதவீதங் கொண்டதொரு அதிகரிப்பைக் காட்டியது. ஒவ்வொரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினுலும் வழங்கப்பட்ட கடன்களின் மீதான விபரமான தகவலை அட்டவணை 2.10 தருகின்றது. நோக்க அடிப்படையிலான கடன்களின் பரம்பல் வேளாண்மையல்லா நடவடிக்கைகளுக்கான கடன்களில் குறிப்பிடத்தக்க பன்முகப்படுத்தல் காணப்பட்டமையை எடுத்துக் காட்டியவேளையில் கடன்களின் குறைந்த சராசரி அளவு சிறிய கடன் பெறுநர்களின் தேவைகளுக்குக் கடன் வழங்குவதில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினுல் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சிகளைப் பிரதிபலித்தது. நோக்க அடிப்படையிலான கடன் வழங்கல் தொழிற்பாடுகளில் ஒரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியிலிருந்து இன்னென்று குறிப்பிடத்தக்களவிற்கு மாறுபட்டிருந்தபோதும் ஒன்ருக நோக்குகையில் பயிர்ச்செய்கை, பண்ணைக் கருவிகள், ஏனைய வகைகள் என்பனவற்றை உள்ளடக்கிய வேளாண்மைக் கடன்கள் 1987 இன் மொத்தக் கடன்களில் ஏறத்தாள 36 சதவீதத்திற்கு வகை கூறின. மேலுமொரு 7 சதவீதம் கால்நடைக்காக இருந்தவேளையில் சிறு கைத்தொழில்களுக்கான கடன்கள் மொத்தக் கடன் பட்டியலில் ஏறத்தாள 16 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தன. வர்த்தகம் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கான கடன்களின் பங்கு 35 சதவீதத்தினைப் பிரதிபலித்தது. அட்டவணை 2.11 இல் காட்டப்பட்டவாறு 1986 உடன் ஒப்பிடுகையில் 1987 இன் கடன்களினது நோக்க அடிப்படையிலான பகிர்ந்தளிப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணப்படவில்லை.

சார்பு ரீதியில் குறைந்தமட்ட மூலவளங்களே பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளமையும் சாதாரணமாக ஏனைய வர்த்தக வங்கிகளின் இலக்கினைக் கவராத குழுவான சிறிய கடன் பெறுநர்களுக்கு உதவ வேண்டியதில் இவர்களுக்குள்ள கடப்பாட்டையும் கருத்திற் கொண்டு பிரதேச

## அட்டவணை 2.9

## வைப்புக்களின் திரட்டலின் மாவட்ட அடிப்படையிலான பகுப்பாய்வு
## 1986, 1987 முடிவில்

(தொகை ரூ. '000)

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர் | சேமிப்பு வைப்புக்கள் | | | | நிலையான வைப்புக்கள் | | | | மொத்தம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1986 | | 1987 | | 1986 | | 1987 | | 1986 | | 1987 | |
| | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| களுத்துறை ... | 10,295 | 3,389 | 20,563 | 8,496 | 94 | 3,446 | 133 | 3,532 | 10,389 | 6,835 | 20,696 | 12,028 |
| மாத்தறை ... | 10,503 | 5,350 | 16,657 | 12,174 | 105 | 672 | 203 | 1,898 | 10,608 | 6,022 | 16,860 | 14,072 |
| குருநாகல் | 13,958 | 4,221 | 20,042 | 9,399 | 49 | 466 | 150 | 2,000 | 14,007 | 4,687 | 20,192 | 11,399 |
| அநுராதபுரம் ... | 5,653 | 2,749 | 8,483 | 3,802 | 02 | 42 | 11 | 611 | 5,655 | 2,790 | 8,494 | 4,413 |
| அம்பாந்தோட்டை | 509 | 259 | 5,839 | 3,239 | 06 | 48 | 75 | 462 | 515 | 307 | 5,914 | 3,701 |
| கேகாலை ... | — | — | 2,888 | 3,113 | — | — | 47 | 421 | — | — | 8.935 | 3,534 |
| புத்தளம் ... | — | — | 3,091 | 1,706 | — | — | 15 | 71 | — | — | 3,106 | 1,777 |
| காலி ... | — | — | 1,230 | 941 | — | — | 19 | 136 | — | — | 1,249 | 1,077 |
| கண்டி ... | — | — | 2,519 | 886 | — | — | 13 | 88 | — | — | 2,532 | 974 |
| மொத்தம் | 40,918 | 15,968 | 87,312 | 43,756 | 256 | 4,674 | 666 | 9,219 | 41,174 | 20,641 | 87,978 | 52,975 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 2.10

**1985, 1986, 1987 இல் வழங்கப்பட்ட கடன்களின் மாவட்ட அடிப்படையிலான பகுப்பாய்வு**

(ரூ. '000)

| மாவட்டம் | 1985 | | 1986 | | 1987 | | மொத்தம் (1985–87) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| களுத்துறை | 335 | 1,154 | 1,799 | 5,740 | 2,700 | 12,787 | 4,834 | 19,681 |
| மாத்தறை | 482 | 787 | 3,424 | 12,602 | 4,977 | 20,166 | 8,883 | 33,555 |
| குருநாகல் | 123 | 1,226 | 1,771 | 14,553 | 1,347 | 11,551 | 3,241 | 27,330 |
| அநுராதபுரம் | 164 | 1,681 | 1,249 | 32,320 | 1,965 | 38,334 | 3,378 | 72,335 |
| அம்பாந்தோட்டை | — | — | — | — | 1,609 | 5,752 | 1,609 | 5,752 |
| கேகாலை | — | — | — | — | 900 | 5,929 | 900 | 5,929 |
| புத்தளம் | — | — | — | — | 109 | 828 | 109 | 828 |
| காலி | — | — | — | — | 80 | 509 | 80 | 509 |
| கண்டி | — | — | — | — | 114 | 280 | 114 | 280 |
| மொத்தம் | 1,104 | 4,848 | 8,243 | 65,215 | 13.801 | 96.136 | 23,148 | 166,199 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சிறிய வேளாண்மையாளர் சிறிய தொழில் முயற்சியாளர், மற்றும் சிறிய கடன் பெறுநர் என்போருக்குச் சிறிய கடன்களை வழங்குவதில் கவனம் செலுத்தின. தகவல்களைப் பரப்புவதற்கும் கடன் பெறுநர்களுக்கு அறிவூட்டுவதற்கும் கொடுகடனுக்கான வழிவகைகளை முன்னேற்றுவதற்கும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 'ஜனகமுவ' அல்லது உள்ளூர் மட்டக் கூட்டம் மற்றும் களங்களுக்குச் செல்லுதல் போன்ற முறைகளைப் பயன்படுத்தினர். பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் வருவாய் உருவாக்கம், சுயதொழில் வாய்ப்புக்கள் போன்றவற்றினை உயர்த்துவதனைத் தொடர்ந்து கிராமிய அபிவிருத்தி பெருமளவிற்கு மேம்பாடடைய உதவியமையினால் இவற்றின் அனுபவங்கள் இதுவரை ஊக்கம் தருவதாக உள்ளன. கள அலுவலர்கள் மூலமாகச் சிறந்த முறையில் கொடுகடன் மேற்பார்வையை மேற்கொண்டமையின் முக்கிய காரணமாக அவை உயர்ந்த மீளப் பெறல் வீதத்தையும் பேணக் கூடியதாக இருந்தன.

## கிராமிய வங்கித்தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி

1987 இல் கிராமிய வங்கித் தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி 42 பயிற்சி நெறிகளையும் ஆய்வரங்குகளையும் ஒழுங்கு செய்து நடாத்தியது. இதில் 928 பேர் பங்கு கொண்டனர். மொத்தமாகப் பங்குபற்றியவர்களில் 273 பேர் வர்த்தக வங்கிகளில் இருந்தும், 225 பேர் பிராந்தியக் கிராமிய அபிவிருத்தி வங்கிகளிலிருந்தும், 146 பேர் மத்திய வங்கிகளிலிருந்தும் பங்கு

அட்டவணை 2.11

1985, 1986, 1987 இல் வழங்கப்பட்ட கடன்களின் நோக்க அடிப்படையிலான ஒப்பீடு

| நோக்கம் | 1985 | | | 1986 | | | 1987 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | சதவீதம் | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | சதவீதம் | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | சதவீதம் |
| வேளாண்மை ... | 395 | 2,027 | 42 | 4,234 | 23,388 | 36 | 6,816 | 34,950 | 36 |
| கால்நடை ... | 77 | 554 | 11 | 585 | 4,905 | 07 | 1,000 | 6,353 | 07 |
| சிறு கைத்தொழில்கள் ... | 257 | 999 | 21 | 1,375 | 8,304 | 13 | 2,429 | 15,229 | 16 |
| வியாபாரமும் வர்த்தகமும் ... | 287 | 790 | 16 | 1,394 | 25,161 | 39 | 2,228 | 33,454 | 35 |
| ஏனையவை ... | 88 | 478 | 10 | 655 | 3,457 | 05 | 1,328 | 6,150 | 06 |
| மொத்தம் ... | 1,104 | 4,848 | 100 | 8,243 | 65,215 | 100 | 13,801 | 96,136 | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பற்றினர். அநேகமாகப் பங்குபற்றியவர்கள் எல்லோரும் வங்கித்தொழில் துறையில் மத்திய அல்லது கீழ்மட்ட முகாமைத்துவப் பிரிவைச் சேர்ந்தவர்களாக விளங்கினர்.

கல்லூரியினுல் வழங்கப்பட்ட பயிற்சி வேளாண்மைச் சிறு கைத்தொழில் செயற்றிட்டங்களை நிதியிடல், வர்த்தகக் கொடுகடனும் நிதிப் பகுப்பாய்வுகளும், சந்தைப்படுத்தல், வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள், கரை கடந்த வங்கித் தொழில், பன்னுட்டு வர்த்தக நிதியிடல், மனித மூலவள முகாமைத்துவத்துடனும் முகாமைத்துவ அபிவிருத்துயோடும் தொடர்புள்ள சிறப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற துறைகளில் விளங்கின. 1987 இல் மனித மூலவள முகாமைத்துவமும் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தியும் போன்ற விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் பாடத்திட்டத்திற்குப் பல மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1987 இல் கொழும்புக்கு வெளியே 17 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைக் கல்லூரி ஒழுங்கு செய்து நடாத்தியது. இவற்றில் நான்கு நிகழ்ச்சித் திட்டங்கள் தனியார் துறையிலுள்ள சிறிய தொழில் முயற்சியாளர்களுக்குப் பயனளிக்கும் நோக்கில் அவர்களின் முகாமைத்துவத் திறனை வளர்ப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டன. பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகளில் புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களுக்காக ஆறு வெளியூர் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## ஊழியர் சேமநிதியம்

உதவுதொகைகள், மேலதிகக் கட்டணங்கள், ஊழியர் சேமநிதிய பணத்தின் முதலீடுகளிலிருந்தான வருவாய் ஆகியவற்றினைப் பெறுவதற்கும், நிதியத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில் வழங்குனர்களினதும் தனிப்பட்ட உறுப்பினர்களினதும் சரியான கணக்குகளைப் பேணுவதற்கும் ஊழியர் சேமநிதிய சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கமைய உறுப்பினர்களுக்கு மீளளிப்பு வசதிகளைச் செய்வதற்குமான பொறுப்பு இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஊழியர் சேமநிதிய சட்டத்தின் ஒழுங்கு விதிகளை நிருவகிப்பதனையும் நடைமுறைப்படுத்துவதனையும் மேற்கொள்ளும் தொழிற் திணைக்களத்தின் ஊழியர் சேமநிதிய பிரிவின் நெருங்கிய ஒத்துழைப்புடன் வங்கி இந்நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

### உதவு தொகைகள்

1987 இல் நிதியத்தினுல் பெறப்பட்ட உதவுதொகைகள் 1986 இன் ரூ. 20,479 இலட்சத்திற்கு எதிராக ரூ. 21,943 இலட்சமாக அமைந்தது. முன்னைய ஆண்டில் பெறப்பட்ட உதவு தொகைகளைவிட இது ரூ. 1,464 இலட்சம் அல்லது 7.1 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டுகிறது.

### உறுப்பினர் நிலுவைகள்

ஆய்வுக்குரிய ஆண்டுக்கான வட்டியினை ஒதுக்க முன்னர் உறுப்பினர் நிலுவைகள் 1987 திசெம்பர் 31 இல் ரூ. 200,615 இலட்சமாக விளங்கி 1986 இன் மட்டத்தினைவிட ரூ. 36,594 இலட்சம் அல்லது 22.3 சதவீதமான அதிகரிப்பைக் காட்டியது.

**முதலீடுகள்**

ஆய்வுக்குரிய ஆண்டில் அரச பிணைகள், திறைசேரி உண்டியல்கள், இரு தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்களின் கடன் கரைப்பு நிதியங்களின் வசமிருந்த ரூபாக் கடன் இருப்புகள் ஆகியவற்றில் நிதியம் மொத்தம் ரூ. 44,097 இலட்சத்தினை முதலிட்டது. 1986 இல் முதலிடப்பட்ட ரூ. 61,380 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் இது ரூ. 17,283 இலட்சம் குறைவானதாகும். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ஊழியர் சேமநிதிய நன்மைகளின் அளவு 1986 இன் நன்மைகளைவிட 62.6 சதவீதம் அதிகமாக விளங்கியமையாலும் 1986 உடன் ஒப்பிடுகையில் 1987 இல் பெறப்பட்ட முதிர்ச்சிப் பெறுகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாகவும் ஏற்பட்டது. ஆய்வுக்குரிய ஆண்டில் செய்யப்பட்ட மொத்த முதலீடுகள், ரூ. 4,939 இலட்சங் கொண்ட முன்னைய முதலீடுகளினதும் திறைசேரி உண்டியல்களினதும் முதிர்ச்சிப் பெறுகைகளைப் பிரதிபலிக்கும் தொகையை உள்ளடக்கியிருந்தது. அரச பிணைகளில் முதலிடப்பட்ட மொத்தத தொகை ரூ. 42,277 இலட்சத்திற்கு வகை கூறியதுடன் இது 1987 இல் இலங்கை அரசினால் வழங்கப்பட்ட மொத்தப் பிணைகளின்60.4 சதவீதத்தினைப் பிரதிபலித்தது. இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்களில் முதலிடப்பட்ட தொகை ரூ.1,710 இலட்சமாகும். இவ்வாண்டில் பல்வேறு நிலைகளில் திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சியடைந்தமையால் மீளாய்விற்குரிய ஆண்டின் இறுதியில் நிதியம் திறைசேரி உண்டியல்கள் எதனையும் வைத்திருக்கவில்லை. 1987 திசெம்பர் 31 இல் நிதியத்தினால் வைக்கப்பட்ட மொத்த முதலீடுகள் 216,340 இலட்சமாக அமைந்து 1986 இன் மட்டத்தினைவிட ரூ. 39,154 இலட்சங் கொண்ட ஓர்அதிகரிப்பினைக் காட்டியது. இது தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்களின் கடன் கரைப்பு நிதியத்தின் வசமிருந்த ரூபாக் கடன்களில் முதலிடப்பட்ட ரூ. 106 இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தது.

**முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்**

1987 இல் நிதியத்தின் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் 1986 இன் ரூ. 19,535 இலட்சத்திற்கு மாறாக ரூ. 23,789 இலட்சத்திற்கு வகை கூறி ரூ. 4,254 இலட்சம் அல்லது 21.8 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

**மீளளிப்புக்கள்**

1987 இல் உறுப்பினர்களுக்கு ஊழியர் சேமநிதிய நன்மைகளாக மீளளிப்புச் செய்யப்பட்ட மொத்தத் தொகை 1986 இன் ரூ. 3,527 இலட்சங்களுக்கு எதிராக ரூ. 5,736 இலட்சமாக விளங்கி, ரூ. 2,209 இலட்சம் அல்லது 63 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மீளாய்விற்குரிய ஆண்டில் நன்மைகளின் மீளளிப்புக்காக 34,530 கோரல்கள் செலுத்தப்பட்டதுடன் இது இந்திய வம்சாவழித் தாயகம் திரும்புவோரின் 364 கோரல்களையும் உள்ளடக்கியிருந்தது.

**உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி**

ஊழியர் சேமநிதியம் இந்நிதியத்தின் பணங்களின் முதலீடுகளிலிருந்து பெறப்படும் வருவாயிலிருந்து ஒவ்வொரு ஆண்டு முடிவிலுள்ள உறுப்பினர் நிலுவைகள் மீதும் வட்டி வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டினைப் போலவே 1987 இறுதியிலுள்ள உறுப்பினர் நிலுவைகள்மீது வழங்கப்படவேண்டிய வட்டி

வீதம் ஆண்டுக்கு 12.5 சதவீதமாக மாறுதிருந்தது. எனினும் செயற்படும் வீதம் மேலுள்ள வீதத்தினைவிட உயர்வானதாகும். ஏனெனில் நடைமுறையாண்டின் உதவுதொகைகள் உறுப்பினர் வரவில் ஆண்டு முழுவதும் காணப்பட்டதோ அல்லவோ என்பதைக் கருதாமல் இறுதியாண்டு நிலுவையிலேயே வட்டி கணிக்கப்படுகிறது.

**ஊழியர் சேமநிதியக் கணக்குப் புத்தகத்தில் நிலுவைகளின் பதிவு**

தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஊழியர் சேமநிதிய கணக்குப் புத்தகத்தில் நிலுவைகளைப் பதிவு செய்தல் மீளாய்விற்குரிய ஆண்டிலும் தொடர்ந்தது. எனினும் 1986 இறுதியிலுள்ள உறுப்பினர்கள் நிலுவைகளைக் குறிக்கும் ஆண்டுக் கூற்றுக்களின் வழங்கல் கடந்த காலங்களில் செய்யப்பட்டதுபோலத் தொடர்ந்தும் அனுப்பப்பட்டன.

தற்போது கிடைக்கத்தக்க தரவுகள் மீதான நிதியத்தின் தொழிற்பாடுகளின் ஒப்பீட்டு ரீதியான அறிக்கையொன்று அட்டவணை 2.12 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.12

**ஊழியர் சேமநிதியப் புள்ளி விபரங்கள் 1986–1987**

| விடயம் | | 1986 | 1987 |
|---|---|---|---|
| 1. பெறப்பட்ட உதவு தொகைகள் (ரூ. '000) | ... | 2,047,962(அ) | 2,194,280(அ) |
| 2. முதலீடுகள் (ரூ. '000) | ... | 6,137,982(ஆ) | 4,409,686(ஆ) |
| 3. முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் (ரூ. '000) | ... | 1,953,489 | 2,378,882 |
| 4. மீளளிப்புக் கொடுப்பனவுகள் (ரூ. '000) | ... | 352,709 | 573,600 |
| 5. மீளளிப்புக்களின் எண்ணிக்கை | ... | 25,219 | 34,530 |
| 6. வட்டி வீதம் (%) | ... | 12.5 | 12.5 |
| 7. உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி ஒதுக்கு (ரூ. '000) | ... | 2,050,259 | 2,507,681 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தொங்கற் கணக்கில் வரவு வைக்கப்பட்ட உதவு தொகைகள் நீங்கலாக.

(ஆ) அரச பிணைகளில் மீள் முதலீடு செய்யப்பட்ட முதிர்ச்சித் தொகைகளையும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட பணத்தையும் உள்ளடக்கும்.

## செலாவணிக் கட்டுப்பாடு

செலாவணிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் நடைமுறைப்படுத்தலில் மத்திய வங்கி அரசின் முகவரான அதன் பங்கினைத் தொடர்ந்தும் மேற்கொள்கையில் மீளாய்விற்குரிய ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டு விதிமுறைகளில் பின்வரும் மாற்றங்களை மேற்கொண்டது:—

1. இறக்குமதிகள்

(அ) மைசூர்ப் பருப்பு இறக்குமதிக்கான கொடுகடன் பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரால் வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப் பத்திரமொன்று அவசியமென அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் அறிவிக்கப்பட்டனர். தனியார்துறை இறக்குமதியாளர்களினுல் மைசூர்ப் பருப்பு இறக்குமதிக்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட கொடுகடன் பத்திரங்களின் பெறுமதி உயர்த்தப்படவோ அல்லது தொடக்கத்திலுள்ள முடிவுத் திகதி நீடிக்கப்படவோ கூடாதெனவும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் அறிவிக்கப்பட்டனர். (தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இலக்கங்கள் ஈசி/14/87 (பி) யும் ஈசி/24/87 (பி) யும் முறையே 1987. 04.03 ஆம், 1987.06.16 ஆம் திகதியிடப்பட்டவைகளும்).

(ஆ) இலங்கை ஏற்றுமதிகளுக்காகப் பெட்டிகள் அல்லது கொள்கலன்களின் (தேயிலைப் பெட்டித் தொகுதிகள்) தயாரிப்புக்கென இறக்குமதி செய்யப்படும் ஒட்டுப்பலகைகளுக்கான கொடுகடன் பத்திரங்களின் சமர்ப்பித்தலுக்கு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரின் இறக்குமதி அனுமதிப் பத்திரம் தேவையில்லையென அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் அறிவிக்கப்பட்டனர். (1987.07.09 எனத் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இலக்கம் ஈசி/29/87 (பி).

(இ) கீழ்வரும் விடயங்களில் இறக்குமதிக்கான கொடுகடன் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரிடம் பெறப்பட்ட இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் அவசியமென அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் அறிவிக்கப்பட்டனர்.

(1) சி.சி.சி.என் இலக்கம்

07.05(11) உலர்ந்த பயற்றினம் சார்ந்த காய்கறிகள் தோலுடனே அல்லாமலோ—ஏனையவை (தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், 1987.07.15 இன் இல. ஈசி/30/87 (பி).

(11) சி.சி.சி.என். இல.

25.24 கல்நார்த் தகடுகள்.

(அ) நீல கல்நார்த் தகடுகள்.

(ஆ) ஏனையவை.

88.01 பலூன்களும் வான் கலங்களும்.

88.02 பறக்கும் பொறிகள், சறுக்கு வானூர்திகள், பட்டங்கள், ரேட்டோசூட்.

(அ) பொறியினுல் உந்தப்படும் ரூேட்டோசூட் பொருத்தப்படாத வான் கலம்.

(ஆ) கெலிகொப்டர்கள்.

(இ) ஏனைய 2,000 கிலோ கிரும்களுக்கு விஞ்சாத தனி நிறையையுடைய வான் கலங்கள்.

(ஈ) ஏனைய 2,000 கிலோ கிரும்களை விஞ்சிய ஆனுல் 15,000 கிலோ கிரும்களை விஞ்சாத தனி நிறையையுடைய வான் கலங்கள்.

(உ) 15,000 கிலோ கிரும்களை விஞ்சிய தனி நிறையுடைய ஏனைய வான் கலங்கள்.

88.03 எண் 88.01 அல்லது 88.02 தலைப்பின் கீழ்வரும் பொருட்களின் பகுதிகள்.

88.04 பரசூட்களும் அவற்றின் பாகங்களும், அவற்றுக்கான துணைப் பாகங்களும்.

88.05 வான் கலங்களைச் செலுத்தும் விசைப் பொறிகள்; தரையிற் பறக்கும் பயிற்சி வான்கலங்கள் மேற்கூறப்பட்ட பொருட்களின் ஏதாவது பாகங்கள். (1987.08.25 இன் ஈசி/34/87/பி இலக்கத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

(iii) சி.சி.சி. என். இலக்கம்

48.01 எ அச்சுத்தாள்.

(i) உருளையாக அல்லது சுருள்களாக.

(ii) ஏனையவை. (1987.10.22 இன் ஈசி/41/87 பி தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

(ஈ) எந்த நாட்டிலிருந்தும் சோளத்தினை இறக்குமதி செய்வதற்குக் கொடுகடன் பத்திரங்கள் ஏற்பாடு செய்யக் கூடாதென அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் அறிவுறுத்தப்பட்டனர். (தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஈசி/48/87 (பி) 1987.12.21).

(உ) நாட்டிற்குள் கொண்டு வரப்படும் வெளிநாட்டு நாணயம் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற தேவை வெளிநாட்டவர்களைப் பொறுத்த மட்டில் நாட்டிற்குள் அவ்வாறு கொண்டு வரப்படும் நாணயம் நாணயத் தாள்களின் ஐ.அ. டொலர் 100 இற்கு மேற்பட்டதாகவும், பயணத்தார் காசோலைகள், பத்திரங்கள் போன்ற ஏனைய பண விடயங்களாயின் ஐ.அ. டொலர் 1,000 இற்கு மேற்பட்டதாகவும் கொண்டு வருபவர்களுக்கு பொருந்தக்கூடியதாக இருக்க வேண்டுமெனப் பிரதம சுங்கச் சேகரிப்பாளர் அறிவிக்கப்பட்டனர்.

**2. ஏற்றுமதிகள்**

பெருமதி ரூபா 3,000 இற்கு மேற்படாத உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நன்கொடைகளினதும், வர்த்தக மாதிரிகளினதும் ஏற்றுமதியைப் பிரதம சுங்கச் சேகரிப்பாளர். தனது தீர்மானத்திற்கமைய அனுமதிக்கலாம் என்று அறிவிக்கப் பட்டனர். (சுங்கச் சேகரிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட 1987.09.10 ஆம் திகதியிடப்பட்ட இல. ஈசி—எஸ்—ஏ.எ—01—87 கடிதங்கள்).

**3. பயணம்**

(அ) வியாபார நோக்கில் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்பவர்களுக்குப் பின்வரும் அதிகரிக்கப்பட்ட செலாவணிப் படிகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் அனுமதிக்கப்பட்டனர். (தொழிற் பாட்டு அறிவுறுத்தல்கள் 1987.01.02 இன் இல. ஈசி/01/87 (கே).

(i) கூட்டு நிலையங்கள், பங்குடமைகள், தனியுடமையாளர் ஆகிய வற்றின் பணிப்பாளர்களுக்கு

(அ) வங்காள தேசம், பூட்டான், பர்மா, இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாக்கித்தான் ஆகிய நாடுகளுக்கான பயணத் திற்கு நாள் ஒன்றுக்கு ஐ.அ. டொலர் 100 இன்படி ஆகக் கூடியது 30 நாட்களுக்கு

(ஆ) ஏனைய நாடுகளுக்கான பயணத்திற்கு நாள் ஒன்றுக்கு ஐ.அ. டொலர் 150 இன்படி ஆகக் கூடியது 30 நாட்களுக்கு

(ii) கூட்டு நிலையங்கள், பங்குடமைகள், தனியுடமைகள் சொந்தமான போன்றவற்றின் ஊழியர்களுக்கு

(அ) வங்காள தேசம், பூட்டான், பர்மா, இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாக்கித்தான் ஆகிய நாடுகளுக்கான பயணங் களுக்கு நாள் ஒன்றுக்கு ஐ.அ. டொலர் 60 இன்படி ஆகக் கூடியது 30 நாட்களுக்கு

(ஆ) ஏனைய நாடுகளுக்கான பயணத்திற்கு நாள் ஒன்றுக்கு ஐ.அ. டொலர் 100 இன்படி ஆகக் கூடியது 30 நாட்களுக்கு

(அ) இலங்கையில் வதியும் இலங்கையர்களுக்கு வெளிநாடுகளுக்கான பயணங் களுக்குப் பின்வரும் அதிகரிக்கப்பட்ட அடிப்படைச் செலாவணிப்படிகள் வழங்குவதற்கு அதிகாரமளிக்சப்பட்ட வியாபாரிகள் அனுமதிக்கப்பட் டனர். (தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஈசி—36—87 (கே)— 1987.09.10).

(i) வங்காள தேசம், பூட்டான், பர்மா, இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகித்தான் ஆகிய நாடுகளுக்கான பயணத்திற்காக இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை வயது வந்த ஒருவருக்கு ஐ.அ. டொலர் 300 உம், 12 வயதுக்குக் கீழானவர்களுக்கு ஐ.அ. டொலர் 150 உம் கொண்ட அடிப்படைச் செலாவணிப்படி.

(ii) மேலே (1) இல் குறிப்பிடப்படாத நாடுகளுக்கான பயணத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை வயது வந்த ஒருவருக்கு ஐ.அ. டொலர் 1,200 உம், 12 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு ஐ.அ. டொலர் 600 உம் கொண்ட அடிப்படைச் செலாவணிப் படி.

## பொதுப்படு கடன்

நாணய விதிச்சட்டத்தின் 113 ஆம் பிரிவின்படி அரசின் சார்பாக வங்கி பொதுப்படு கடனை முகாமைப்படுத்தலைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. அரச பிணைகள்—கடன்களை மிதக்கவிடல், திறைசேரி உண்டியல்களையும், வரி ஒதுக்குச் சான்றிதழ்களையும் வழங்கல், அரசின் வெளிநாட்டுக் கடன்களைப் பேணுதல் போன்றவையே 1987 இல் வங்கியினால் கையாளப்பட்ட முக்கிய கடமைகளாக விளங்கின.

1987 இறுதியில் வெளிநின்ற மொத்த, தேறிய பொதுப் படுகடன் முறையே ரூ. 1,916,048 இலட்சமாகவும், ரூ. 1,864,265 இலட்சமாகவும் விளங்கியன. ரூ. 70,000 இலட்சத்திற்கு வகை கூறும் ரூபாக் கடன்கள் 1987 இல் மிதக்க விடப்பட்டன. 1987 இல் ரூபாக் கடன்களில் மொத்த மீள் கொடுப்பனவுகள் ரூ. 11,723 இலட்சமாக விளங்கியதுடன் ஆண்டு முடிவில் வெளிநின்ற தொகை ரூ. 397,792 இலட்சமாக விளங்கியன. திறைசேரி உண்டியல்களின் அதிகார மளிக்கப்பட்ட எல்லை ரூ. 350,000 இலட்சமாக மாறாது விளங்கியது. ஆண்டு முடிவில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் அளவு ரூ. 298,500 இலட்ச மாகும். 1986 நவெம்பரில் தொடங்கிய திறைசேரி உண்டியல்களின் வாராந்த வெளியீடு 1987 இலும் தொடர்ந்தது.

1987 இல் அரசின் நடுத்தர நீண்டகாலக் கடன்பாடுகளின் மீதான மொத்த வழங்கல் ரூ. 95,194 இலட்சத்திற்கு வகை கூறியதுடன் மீள் கொடுப்பனவுகள் ரூ. 46,641 இலட்சத்திற்கு வகை கூறியன. 1987 இல் வெளிநாட்டுப் பொதுப் படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவும் ஏனைய கட்டணங்களும் ரூ. 24,879 இலட்சமாக விளங்கியன. 1987 இல் வெளிநிற்கும் மொத்த வெளிநாட்டுப் பொதுப்படுகடன் ரூ. 1,113,386 இலட்சமாக விளங்கியது.

வங்கி, 1987 இல் அரச ஈட்டு வங்கியின் சார்பாகத் தொகுதிக் கடன்களை மிதக்கவிட்டதோடு நாணய விதிச்சட்டத்தின் 91 (1) (பி) பிரிவின்படி மத்திய வங்கிப் பிணைகளையும் தொடர்ந்து வழங்கியது.

வங்கி இவ்வாண்டில், இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் மீதான தரவு அடிப்படைகளை முன்னேற்றும் நோக்கில் வெளிநாட்டுப் படுகடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தரவுகளைக் கணனிமயப்படுத்தலுக்காக நிதித் திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டுப் படுகடன் கண்காணிப்புப் பிரிவுக்குத் தொடர்ந்தும் அனுப்பியது.

## பிரதேச அலுவலகம்—மாத்தறை

1987 இல் மாத்தறைப் பிரதேச அலுவலகம் பரந்தளவு பகுதிகளை உள்ளடக்கும் விதத்தில் அதன் நடவடிக்கைகளை விரிவாக்கியதோடு பெருமளவு ஆட்களுக்குக் கூடிய திறமையான பணிகளை வழங்குவதற்கும் முடிந்தது. பிரதேச அலுவலகம் பண்ணையல்லா நடவடிக்கைகளிலுள்ள சிறு அளவிலான தொழில் முயற்சிகளுக்குக் குறிப்பிடத்தக்க முக்கியத்ததுவத்தை வழங்கிக் கூடிய அளவிலான பொருளாதார நடவடிக்கைகளுக்கு நிறுவன மயப்படுத்தப்பட்ட கொடுகடன் பாய்ச்சலை முன்னேற்றுவதற்குத் தீவிரமான முயற்சியை மேற்கொண்டது. மேலும் அலுவலகம் அதன் பயிற்சி நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டதோடு ஏனைய உதவிப் பணிகளையும் பெருமளவு ஆட்களுக்கு வழங்கியது.

### மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகள்

அட்டவணை 2.13 மாத்தறைப் பிரதேச அலுவலகத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட மீள் நிதியிடல் கொடுகடன் திட்டங்களின் புள்ளி விபரத் தொகுப்பினைத் தருகின்றது.

அட்டவணை 2.13

மாத்தறை பிரதேச அலுவலகம்—மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகளின் புள்ளிவிபர தொகுப்பு –1987

| திட்டங்கள் | 1987 | | 1987 இறுதியில் ஒன்று சேர்ந்தது | |
|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) | கடன்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
| 1. சுயதொழில் வாய்ப்புக்கான மீள் நிதியிடல் கொடுகடன் திட்டம் | 204 | 2,254,535 | 1,001 | 9,011,220 |
| 2. கிராம எற்பு மீள் நிதியிடல் கொடுகடன் திட்டம் .. | 01 | 11,000 | 117 | 603,685 |
| 3. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் மாதிரி யாயா நெற்பயிர்ச் செய்கைக் கான கடன்கள் .. | 550 (அ) | 1,047,736 | 2,138 | 4,964,629 |
| 4. உயர்நில வேளாண்மைக்கான கடன்கள் .. | 77 | 308,470 | 210(ஆ) | 1,172,280 |
| 5. தேயிலை வளமாக்கி மீள் நிதியிடல் கடன் திட்டம் .. | — | — | 183(இ) | 1,266,124 |
| 6. தெங்கு வளமாக்கி மீள் நிதியிடல் கடன் திட்டம் .. | 07 | 359,895 | 370 | 3,226,945 |
| 7. மொனராகல இரு சில்லு உழவு இயந்திர உழுபொறிக்கடன்கள் .. | — | — | 04 | 155.940 |
| மொத்தம் .. | 839 | 3,981,636 | 4,023 | 20,400,823 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 1986/87 பெரும் போகம்
1987 சிறுபோகம்
1987/88 பெரும்போகம்
(ஆ) புத்தள. வெள்ளவாய 42 திறந்த கிணறுகளையும் உள்ளடக்கும்.
(இ) முன்னைய 46 ஒப்புதல்கள் புறக்கீடு செய்யப்பட்டன.

**சுயதொழில் வாய்ப்பும், கிராம ஏற்புக் கடன்திட்டங்களும்**

**காலி, மாத்தறை மாவட்டங்கள்**

**1. கடன் விதந்துரைப்புக்களும் ஒப்புதல்களும்**

முன்னைய ஆண்டைப் போலவே 1987 இலும் பிரதேச அலுவலகம் சுய தொழில்வாய்ப்புக் கடன் திட்டங்களுக்கு அதிகளவு முக்கியத்துவத்தைக் கொடுத்தது. கிராம ஏற்புக் கடன் திட்டத்தின்கீழ் மீளாய்விற்குரிய ஆண்டில் ரூ. 8,000 இற்கு வகை கூறும் ஒரு கடன் மட்டுமே விதந்துரைக்கப்பட்டது. எனினும் சுய தொழில் வாய்ப்புக் கடன் திட்டங்களின்கீழ் ரூ. 21 இலட்சத்திற்கு வகை கூறும் 251 செயற்றிட்டங்கள் வங்கி நிதியிடலுக்காக 1987 இல் விதந்துரைக்கப்பட்டன. இவ்வாண்டில் தொடர்பான வங்கிகள் சுயதொழில் வாய்ப்புக் கடன் திட்டங்களின் கீழ் ஏறத்தாழ ரூ. 20 இலட்சம் பெறுமதியான கடனுக்கான 204 செயற்றிட்டங்களுக்கு மொத்தமாக ஒப்புதலளித்தன. பிரதேச அலுவலகத்தினால் விதந்துரைக்கப்பட்ட கடன்களின் மேலதிக விபரங்களும் வங்கிகளால் ஒப்புதலளிக்கப்பட்டவையும் அட்டவணை 2.14 இல் தரப்பட்டுள்ளவேளையில் கடன் ஒப்புதல்களின் துறைவாரியான பகுப்பு அட்டவணை 2.15 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.14

**மாத்தறை பிரதேச அலுவலகம்: சுயதொழில் வாய்ப்பு திட்டங்களின்கீழ் விதந்துரைக்கப்பட்டதும் ஒப்புதலளிக்கப்பட்டதுமான கடன்கள்—1987**

| வங்கி | விதந்துரைக்கப்பட்டது | | ஒப்புதலளிக்கப்பட்டது | |
|---|---|---|---|---|
| | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
| இலங்கை வங்கி ... | 137 | 1,303,590 | 115 | 1,234,500 |
| மக்கள் வங்கி ... | 61 | 470,355 | 46 | 425,455 |
| இந்தியன் ஓவசீஸ் வங்கி ... | 32 | 192,000 | 32 | 190,500 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி ... | 21 | 180,750 | 11 | 104,080 |
| மொத்தம் ... | 251 | 2,146,695 | 204 | 1,954,535 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 2.15

**மாத்தறை பிரதேச அலுவலகம்: ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் துறைவகைப் படியான பகுப்பாய்வு**

| துறை | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | | கடன்தொகை (ரூபா) | |
|---|---|---|---|---|
| | 1987 ஆம் ஆண்டு | 1987 இறுதி வரை (ஒன்று சேர்ந்தது) | 1987 ஆம் ஆண்டு | 1987 இறுதி வரை (ஒன்று சேர்ந்தது) |
| வேளாண்மை ... | 59 | 326 | 678,080 | 2,568,930 |
| கைத்தொழில் ... | 90 | 529 | 695,455 | 3,303,030 |
| பணி, பண்ணைவது முதலியவை ... | 55 | 263 | 592,000 | 3,731,945 |
| மொத்தம் ... | 204 | 1,118 | 1,965,535 | 9,614,905 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**2. மீள் கொடுப்பனவுகள்**

ஆய்விற்குரிய ஆண்டில் ரூ. 11 இலட்சங்கள் கொண்ட 123 கடன்கள் முழுமையாக மீளளிக்கப்பட்டு 1987 இறுதியில் முழுமையாக மீளளிக்கப்பட்ட மொத்தக் கடன்களின் எண்ணிக்கையையும் பெறுமதியையும் முறையே 378 இற்கும் ரூ. 28 இலட்சத்திற்கும் கொண்டு வந்தது. மொத்தமாக ஒப்புதலளிக்கப் பட்ட கடன் பட்டியலில் இது 22.3 சதவீதத்தினைப் பிரதிபலித்தது.

**புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழான நெற்பயிர்ச் செய்கைக் கொடுகடன்கள்**

பிரதேச அலுவலகம் நெற்பயிர்ச் செய்கைக் கடன்கள் தொடர்பாக மாதிரி யாயா முறையைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. அக்குறஸ்ச. அக்மனை, தெவிநுவர, கம்புறுப்பிட்டியா, மாத்தறை ஆகிய தேர்தற் தொகுதிகளிலுள்ள யாயா அமைப்புகளுக்கு இவ்வாண்டில் இத்திட்டத்தின்கீழ்க் கடன்கள் வழங்கப் பட்டன. கடன்களின் விபரங்கள் அட்டவணை 2.16 இல் தரப்பட்டுள்ளன. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் ஏற்பாடு களுக்கு அமைய இவ்வாண்டில் மீள அட்டவணைப்படுத்துவதற்காகப் பல கடன்கள் விதந்துரைக்கப்பட்டன. இப்பகுதிகளிலுள்ள பெருந்தொகையான வேளாண்மை யாளர்களுக்குப் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத் தில் கூடிய அறிவினை வழங்கும் நோக்கில் பிரதேச அலுவலகம் பல ஆய்வரங்கு களையும் ஒழுங்கு செய்தது.

**தேயிலை, தெங்கு, வளமாக்கிக் கடன் திட்டங்கள்**

இவ்வாண்டில் இவ்விரு கொடுகடன் திட்டங்களின் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்குப் பிரதேச அலுவலகம் தொடர்ந்தும் முயற்சிகள் எடுத்தபோதிலும் அவற்றின் செயற்பாடுகள் 1987 இலும் எதிர்பார்ப்புக்கு மிகவும் கீழேயே காணப்பட்டன. இவ்வாண்டில் தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டத்தின் கீழுள்ள பரப்பில் செய்கையாளர்களுக்கு ரூ. 359,895 கொண்ட ஏழு கடன்கள் மட்டுமே வழங்கப்பட்டதோடு 1987 இறுதியில் அவ்வகைக் கடன்களின் மொத்த எண்ணிக்கைகளும் பெறுமதியும் முறையே 370 ஆகவும் ரூ. 32 இலட்சமாகவும் விளங்கின. இவ்வாண்டில் தேயிலை வளமாக்கிக் கடன் திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கப்படவில்லை.

**திறைசேரி உண்டியல்களின் வழங்கல்**

1987 இல் பிரதேச அலுவலகம் ரூ. 120 இலட்சம் பெறுமதியான திறைசேரி உண்டியல்களைச் சந்தைப்படுத்தியது.

**உள் நாட்டு தீர்வகம்**

இவ்வாண்டில் இத்தீர்வகம் ரூ. 10,332 இலட்சம் பெறுமதியான 139,305 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது.

## பிரதேச அலுவலகம்—அநுராதபுரம்

1987 இல் அநுராதபுரம் பிரதேச அலுவலகம் மிகப் பரந்தளவு நடவடிக்கைகளுக்குக் குறுகியகால, நீண்ட, நடுத்தரக் காலக் கொடுகடனை முன்னேற்றுவது தொடர்பான அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இப் பிரதேச அலுவலகம் கடன்பாட்டாளர்களுக்கு நிதி, முகாமைத்துவம், தொழில் நுட்பம் போன்றன அடங்கலான விடயங்களில் வழிகாட்டலையும் விரிவான உதவிகளையும் கூடிய அளவில் வழங்குவதைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் குடித்தொகையின் கூடியளவு பகுதியை அடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டன. மத்திய வங்கியின் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 2,000 இற்கும் மேற்பட்டோர் பயிற்சி வசதிகளைப் பெற்றனர். பொது மக்களுக்கு அபிவிருத்தி வங்கித் தொழில் விபரங்களை வழங்கும் முயற்சியாக இவ்வாண்டில் அதிகளவு எண்ணிக்கையான கிராம கூட்டங்கள், கலந்துரையாடல்கள், தொழில் பயிற்சி வகுப்புக்கள் போன்றவை நடாத்தப்பட்டன. திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சு பெண்கள் பணியகம், இளைஞர் தொழில் வாய்ப்பு அமைச்சு, கைத் தொழில் அபிவிருத்திச் சபை போன்ற பல ஏனைய நிறுவனங்களுக்கும் வங்கி அவற்றின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதில் உதவியளித்தது.

வேளாண்மைப் போட்டி ஒன்று இரண்டாவது ஆண்டாகத் தொடர்ந்தும் நடாத்தப்பட்டது. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வருகை தந்த கடன்பாட்டாளர்களுக்குக் கிடைக்கப்பெற்ற நன்மைகளை இதில் காணக்கூடியதாகவிருந்தது. இப்போட்டி கூடியளவு வருவாயைப் பெறுவதற்குச் செறிவான பயிர்ச்செய்கைச் செய்முறைகளை மேற்கொள்ளப் பெருமளவு வேளாண்மையாளர்களைத் தூண்டியது.

அட்டவணை 2.16

மாத்தறை பிரதேச அலுவலகம்: மாதிரி யாயா கடன்கள்

| தேர்தற்றொகுதி | 1986/87 பெரும்போகம் | | | 1987 சிறுபோகம் | | | 1987/88 பெரும்போகம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏக்கர் | வேளாண்மை யாளர்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக் கப்பட்ட கடன் (ரூபா) | ஏக்கர் | வேளாண்மை யாளர்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக் கப்பட்ட கடன் (ரூபா) | ஏக்கர் | வேளாண்மை யாளர்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக் கப்பட்ட கடன் (ரூபா) |
| மாத்தறை ... | — | — | — | — | — | — | 13 | 09 | 27,794 |
| அக்குரச ... | — | 73 | 108,523 | 84 | 54 | 89,076 | 66 | 46 | 62,977 |
| அக்மன ... | — | 57 | 86,224 | 127 | 105 | 185,244 | 157 | 131 | 264,989 |
| கம்புறுபிட்டிய ... | — | 39 | 103,334 | 35 | 11 | 40,618 | 41 | 15 | 59,412 |
| தெனியாய ... | — | 10 | 19,545 | — | — | — | — | — | — |
| மொத்தம் ... | — | 179 | 317,626 | 246 | 170 | 314,938 | 277 | 201 | 415,172 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**மீள்நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகள்**

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழ்ப் பிரதேச அலுவலகத்தின் மீள்நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகளின் தொகுப்பை அட்டவணை 2.17 தருகின்றது.

முன்னைய ஆண்டின் பதிவுகளுடன் ஒப்பிடுகையில் 1987 இல் மிகவும் கூடியளவு கொடுகடனை உள்ளடக்கும் பல எண்ணிக்கையான செயற்றிட்டங்களை விதந்துரைப்பதற்குப் பிரதேச அலுவலகத்திற்கு இயலுமானதாகவிருந்தது.

அட்டவணை 2.17

**அநுராதபுரம் பிரதேச அலுவலகம் : மீள்நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகள்**

| துறை | வங்கிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | விதந்துரைக்கப்பட்ட தொகை (ரூ. '000) | வங்கிகளால் ஒப்புதலளிக்கப்பட்ட எண்ணிக்கை | ஒப்புதலளிக்கப்பட்ட தொகை (ரூ. '000) |
|---|---|---|---|---|
| வேளாண்மை ... | 1,097 | 12,761 | 381 | 4,368 |
| கால்நடை ... | 589 | 3,025 | 154 | 901 |
| சிறு கைத்தொழில் ... | 324 | 3,396 | 188 | 1,848 |
| பணிகள் ... | 150 | 1,122 | 83 | 816 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மேலும் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் நெல்லுக்கும் பலவகையான துணை உணவுப் பயிர்களுக்குமான குறுகிய கால உற்பத்திக் கடன்களை முன்னேற்றுவதில் பிரதேச அலுவலகம் முக்கிய பங்கினை வகித்தது. 1987 பயிர்ச்செய்கை ஆண்டில் பிரதேச அலுவலகம் 1,646 ஏக்கர்களுக்கு ரூ. 33 இலட்சத்திற்கு வகை கூறும் 696 அவ்வகைக் கடன்களுக்கு உதவியளித்தது. இக்கடன்கள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் கிளைகளினூலும் அனுராதபுர பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினூலும் வழங்கப்பட்டன. கவனமான கண்காணிப்பு, வேளாண்மைக் கடன்பாட்டாளர்களுக்கு அறிவூட்டல், தொடர்ந்து வழிகாட்டல் போன்றவற்றின் மூலம் கூடியளவு மீள்பெறுகை வீதங்களோடு கொடுகடன் பாய்ச்சலை அதிகரிக்க முடியும் என்பதை இவ்வாண்டில் மேலும் காணக் கூடியதாக இருந்தது.

**நடுத்தர நீண்டகாலச் செயற்றிட்டங்களின் செயலாற்றம்**

பொருளாதார நடவடிக்கைகளுக்கு நிறுவன ரீதியான கொடுகடன் பாய்ச்சலை அதிகரிப்பதன் மூலம் உற்பத்தி வருவாய் தொழில்வாய்ப்புக்கள் என்பனவற்றை அதிகரிப்பதே பிரதேச அலுவலகத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும். 1987 இறுதிவரை பிரதேச அலுவலகத்தால் இனங் காணப்பட்ட செயற்றிட்டங்

களின் மொத்த எண்ணிக்கை 2,160 ஆக விளங்கியதுடன் இதில் 806 இற்குக் கடன் வழங்கும் வங்கிகளால் நிதியிடப்படுவதற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. தொழிற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்கள் மேற்கூறப்பட்ட நோக்கங்கள் தொடர்பாக ஊக்கமளிக்கும் செயற்பாட்டினைக் காட்டின.

**வருவாயும் தொழில் நிலையும்**

இவ்வாண்டில் தொழிற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்களினால் உருவாக்கப்பட்ட மொத்த வருவாய் ரூ. 275 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. வேளாண்மைச் செயற்றிட்டங்கள் கூடுதலானதும் உறுதியானதுமான வருவாயை உருவாக்கியுள்ளமையைத் துறைவாரியான பகுப்பாய்வு உறுதிப்படுத்துகிறது. அதி கூடிய வருவாயைப் பெற்ற மிகவும் ஆற்றல் மிக்க வேளாண்மையாளர்கள் நீங்கலாக நோக்குமிடத்துப் பெரும்பான்மையான செயற்றிட்டங்கள் குறிப்பாகப் பருவ காலங்கள் அல்லாத காலங்களில் கிணறுகளிலிருந்து பெறப்பட்ட நீர் மூலம் 1—2 ஏக்கர்களில் பயிர் செய்யப்பட்ட பணப் பயிர்கள் மூலமாகச் சராசரி வருவாயாக ரூ. 10,000 இலிருந்து ரூ. 15,000 வரை ஒவ்வொரு காலத்திலும் பெற்றன.

தொழில் வாய்ப்பினை உருவாக்குவதில் சிறு அளவிலான கைத்தொழில், பணிகள் துறைச் செயற்றிட்டங்கள் வேளாண்மைச் செயற்றிட்டங்களை விடக் கூடியளவு இயளவைக் காட்டின. திறமையான முகாமைத்துவப்படுத்தப்படும் கைத்தொழில் செயற்றிட்டங்கள் சிலவற்றில் செயற்றிட்டம் ஒன்றுக்கான தொ தொழில் வாய்ப்பு 8 ஆட்களாக இருந்தது. வருவாய், தொழில் வாய்ப்பு உருவாக்கம் மீதான விபரங்கள் அட்டவணை 2.18 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.18

**அநுராதபுரப் பிரதேச அலுவலகம் : மதிப்பிடப்பட்ட வருவாயும், தொழில் வாய்ப்பும்**

| துறை | | தொழிற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | மாதாந்த வருவாய் (ரூபா) | ஆண்டு வருவாய் (ரூபா) | தொழில் வாய்ப்பு (ஆட்களின் எண்ணிக்கை) |
|---|---|---|---|---|---|
| வேளாண்மை | ... | 365 | 1,046,100 | 12,553,200 | 629 |
| கால்நடை | ... | 118 | 51,800 | 621,600 | 77 |
| சிறுகைத்தொழில் | ... | 176 | 994,550 | 11,934,600 | 328 |
| பணிகள் துறை | ... | 81 | 198,100 | 2,377,200 | 87 |
| மொத்தம் | ... | 740 | 2,290,550 | 27,486,600 | 1,121 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

**கடன் மீளக் கொடுப்பனவு**

அட்டவணை 2.19 நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிகழ்ச்சித் திட்டக் கடன்களின் மீள் கொடுப்பனவின் தொகுப்பைத் தருகின்றது.

அட்டவணை 2.19

**அனுராதபுரம் பிரதேச அலுவலகம் – நீண்ட, நடுத்தர கால கடன்களின் மீள் கொடுப்பனவு**

(தொகை ரூ. '000

| துறை | வங்கிகளால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | கடன் தொகை | 1987 இறுதியில் மீளச் செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகை | 1987 இறுதியில் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை | வேரவண்டிய மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. வேளாண்மை ... | 365 | 4,205 | 1,422 | 1,356 | 415 |
| 2. கால்நடை ... | 118 | 659 | 339 | 296 | 433 |
| 3. கைத்தொழில் ... | 176 | 1,609 | 634 | 534 | 108 |
| 4. சேவைகள் ... | 81 | 537 | 266 | 231 | 4 |
| 5. மொத்தம் ... | 740 | 7,010 | 2,661 | 2,417 | 330 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வேளாண்மைத்துறைச் செயற்றிட்டங்கள் 90 சதவீதத்திற்குக் கூடுதலான அதியுயர் மீள் கொடுப்பனவு வீதத்தினைப் பதிவு செய்த வேளையில் பணிகள்துறை 87 சதவீதமான மீள் கொடுப்பனவு வீதத்தினைப் பதிவு செய்தது. கைத்தொழில், கால்நடைக் கடன்களின் மீள் கொடுப்பனவு வீதங்கள் முறையே 84 சதவீதமாகவும், 80 சதவீதமாகவும் விளங்கின. கோழிப் பண்ணைத்துறையில் கால்நடைச் செயற்றிட்டங்களின் தோல்வியே கால்நடைக் கடன்களின் குறைவான மீள் கொடுப்பனவு வீதத்திற்கு முதன்மைப் பங்களிப்புக் காரணியாகும்.

**வேளாண்மைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வரங்குகள்/தொழிற்கூடங்கள்**

திறமையான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திப் பயிர்ச்செய்கை முறைகளைத் தீவிரப்படுத்த வேண்டியதன் தேவையை உறுதிப்படுத்தும் வகையில் பிரதேச அலுவலகத்தினால் பலவகைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு ஒழுங்கான முறையில் நடாத்தப்பட்டன. மீளாய்விற்குரிய ஆண்டில் 500 வேளாண்மையாளர்களுக்கும் கூடுதலானவர்களுக்கு நன்மையளிக்கத்தக்க இவ்வகை நிகழ்ச்சித் திட்டங்கள் 9 மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் நடாத்தப்பட்டன. மேலும் கிராமியப் பகுதிகளில் அபிவிருத்தி முறைகளைத் தெரிந்து கொள்வதனை அதிகரிப்பதற்கும் சமுதாயத்தின் கூடிய பகுதியினர் நிறுவன ரீதியான கொடுகடன் வசதிகளை அடைவதனை அதிகரிப்பதற்குமாக இவ்வாண்டில் 65 கிராமிய கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன.

**திறைசேரி உண்டியல்களின் வழங்கல்**

மீளாய்விற்குரிய ஆண்டில் திறைசேரி உண்டியல்களுக்கு இம்மாவட்டத்திலுள்ள வங்கிகளின் மொத்தப் பங்களிப்பு ரூ. 2,302 இலட்சமாக விளங்கியது. முன்னைய ஆண்டின் பங்களிப்புடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்கவொரு அதிகரிப்பாகும். முக்கிய பங்களிப்பாளர் மக்கள் வங்கியாகும்.

### உள்நாட்டுத் தீர்வகம்

பிரதேச அலுவலகத்திலுள்ள தீர்வகம் இப்பிரதேசத்திலுள்ள வங்கிகளுக்கு தீர்ப்பனவு வசதிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ்வாண்டில் ரூ. 2,420 இலட்சம் பெறுமதியான காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

### பிரதேச அலுவலகம்—மாத்தளை

1987 இல் மாத்தளைப் பிரதேச அலுவலகம் கிராமியக் கொடுகடனையும் அதன் மூலம் கிராமிய அபிவிருத்தியையும் மேம்படுத்தும் நோக்குடன் அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இதன் நடவடிக்கைகள் செயற்றிட்டங்களை அடையாளம் காண்பதுடன் வங்கி நிதியிடலுக்காகச் செயற்றிட்டங்களின் விதந்துரைப்புக்களை மதிப்பிடல், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், வங்கி நிதியிட்ட செயற்றிட்டங்களைக் கண்காணித்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இவ்வாண்டில் கிராமிய சமூகத்தில் நலிவுற்றிருக்கும் பிரிவுகளின் பொருளாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்கு அவர்களுக்கு உதவும் நோக்குடன் இப்பிரிவுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஆய்வுக்குரிய ஆண்டில் பிரதேச அலுவலகத்தினூல் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்பட்ட மீள் நிதியிடல் கடன் திட்டங்களுடன் தொடர்புடைய கொடுகடன் தொழிற்பாடுகளின் தொகுப்பை அட்டவணை 2.20 தருகின்றது.

அட்டவணை 2.20

**மாத்தளை பிரதேச அலுவலகம்: 1987 இன் மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகளின் தொகுப்பு**

| | திட்டம் | நன்மையடைந்தோரின்/வங்கிக்கு நெறிப்படுத்தப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை | விதந்துரைக்கப்பட்ட கடன்களின் அளவு (ரூ.) |
|---|---|---|---|
| 1. | புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் சிறுபோகம்/பெரும்போகம் 1987/88 ... ... | 1,678 | 7,309,538 |
| 2. | சுய தொழில் வாய்ப்பு கொடுகடன் திட்டம் மாத்தளை/கண்டி/கேகாலை ... ... ... | 221 | 1,480,085 |
| 3. | பாற்பண்ணை அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் ... ... | 45 | 344,200 |
| 4. | தீவு முழுவதற்குமான பண்ணை பொறித் தொகுதிக் கடன் திட்டம் | 20 | 888,600 |
| 5. | ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி கடன் திட்டம் (மாத்தளை மாவட்டம்) ... ... ... ... | 01 | 30,000 |
| 6. | சிறிய, நடுத்தர கைத்தொழில் கடன் திட்டம் ... ... | 01 | 32,000 |
| | மொத்தம் ... | 1,965 | 10,084,423 |

மூலம். இலங்கை மத்திய வங்கி

**சிறுபோகப் பயிர்ச்செய்கைக் காலம்—1987**

1986/87 பெரும்போகத்தில் நெற் செய்கையை மிகக் கடுமையாகப் பாதித்த கடும் வரட்சியின் காரணமாகப் பல வேளாண்மையாளர்கள் தமது வங்கிக் கடனை மீளச் செலுத்த முடியாதவர்களாக இருந்ததுடன் 1987 சிறுபோகத்தின் போது புதிய கடன்களுக்கும் தகைமையற்றவர்களாயினர். எனினும், இப் பருவ காலத்தில் தகைமையுள்ள வேளாண்மையாளர்களுக்குப் பல்வேறுபட்ட வழிமுறைகளின் மூலம் நெற் செய்கைக்கான கடன்களின் வழங்கலை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. இப்பருவகாலத்தில் அலுவலகம், மாவட்டத்தில் 16 கொடுகடன் பணிமனைகளை அமைத்ததுடன் நெல் மற்றும் சிறு பயிர்ச்செய்கைக்காக ரூ. 26 இலட்சம் கொண்ட 682 கடன்களையும் விதந்துரைத்தது. 1987 சிறுபோகக் கடன்களின் மீளளிப்பு வீதம் 1987 இறுதியில் 67.5 சதவீதமாக இருந்ததென மதிப்பிடப்பட்டுள்ளது.

**பெரும்போகப் பயிர்ச்செய்கைக்காலம்—1987—88**

1987/88 பெரும்போக பருவகாலத்தில் கொடுகடன் பணிமனைகளின் மொத்த எண்ணிக்கை 21 இற்கு அதிகரித்ததுடன் பணிமனைகளினால் உள்ளடக்கப்பட்ட புவியியற் பரப்பும் விரிவடைந்தது. இப் பணிமனைகளில் சில குறிப்பாக மாவட்டத்தின் பின்னடைந்த, இடர்மிக்க பகுதிகளில் வேளாண்மையாளர்களைக் கொண்டுள்ள பணிமனைகள் நன்மையடைந்ததுடன் வங்கிகளிடமிருந்து கடன் பெறுகின்றபோது அவர்களுக்கு ஏற்படும் கொடுக்கல் வாங்கல் செலவுகளையும் குறைக்க உதவியது. 1987/88 பெரும்போகத்தைப் பொறுத்தவரை புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் நெல் மற்றும் சிறு உணவுப் பயிர்ச் செய்கைக்காக 997 கடன்களுக்கு ரூ. 47 இலட்சம் வழங்கப்பட்டது.

**நடுத்தர நீண்டகால மீள் நிதியிடல் கடன் திட்டங்கள்**

பிரதேச அலுவலகம் தொடர்ந்தும் பெருந்தொகையான நடுத்தர, நீண்டகால மீள் நிதியிடல் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கண்காணித்து வந்தது. இவற்றில் பெரும்பாலும் சுயவேலை வாய்ப்புக் கடன் திட்டம் மிக முக்கியமானதாகும். இக் கடன் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாக இப் பிரதேசத்தில் தொழில் நிலை மட்டம் உற்பத்தி, வருமானம் என்பனவற்றை உயர்த்துவது விளங்கியது. இவ்வாண்டில் 502 சுயதொழில் செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டதுடன் நிதியிடலுக்காக வங்கிகள் வேண்டப்பட்டன. நிதி பெறுவதற்காக வழங்கப்பட்ட உதவிகளுக்குப் புறம்பாக, அலுவலகம் சிறுதொழில் முயற்சிச் சொந்தக்காரர்கள் தமது சந்தைப்படுத்தல் மற்றும் மூலப்பொருள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் முயற்சிகளை மேற்கொண்டது. ஏனைய நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் திட்டங்களில் பாற்பண்ணை அபிவிருத்திக் கொடுகடன் திட்டமும் நாடு முழுவதற்குமான பண்ணை பொறிமுறைக் கடன் திட்டமும் முக்கியமானவையாகும். இத்திட்டங்களனைத்தினதும் மீளச் செலுத்தல் வீதம் ஏறத்தாழ 99 சதவீதமாகும்.

**பயிற்சி, பிரபலப்படுத்தல் நடவடிக்கை**

சுயதொழில்வாய்ப்புக் கடன் திட்டம் மற்றும் பல்வேறுபட்ட ஏனைய வங்கித் தொழில் வசதிகள் பற்றி உள்ளார்ந்த ஆற்றல் மிக்க கடன் பெறுநர்களுக்குக் கல்வியறிவு புகட்டுவதற்காகப் பிரதேச அலுவலகம் பல கூட்டங்களையும் ஆய் வரங்குகளையும் ஒழுங்கு செய்தது. சிறு கைத்தொழில், கோழி வளர்ப்பு, பாற் பண்ணை என்பனவற்றினைப் பற்றிப் பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப் பட்டன.

**திறைசேரி உண்டியல்களின் வழங்கல்**

ஆய்வுக்குரிய ஆண்டில் பிரதேச அலுவலகம் ரூ. 2,195 இலட்சம் பெறுமதி கொண்ட திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்தது. வழங்கலின் மாவட்ட அடிப்படையிலான பகுப்பாய்வு அட்டவணை 2.21 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.21

**மாத்தளை பிரதேச அலுவலகம் : திறைசேரி உண்டியல்களின் வழங்கல்கள் – 1987**

| மாவட்டம் | தொகை (ரூபா) |
|---|---|
| கண்டி ... ... ... | 164,961,000 |
| மாத்தளை ... ... ... | 53,715,000 |
| கேகாலை ... ... ... | 850,000 |
| மொத்தம் ... ... ... | 219,526,000 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

**உள்ளூர் தீர்வகம்**

1987 ஆம் ஆண்டில் மாத்தளைப் பிரதேச தீர்வகத்தில் ரூ. 4,416 இலட்சம் பெறுமதியான 79,687 காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. 1987 ஓகத்தில் கண்டியிலுள்ள பிரதேச தீர்வகம் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கியதுடன் 1987 இறுதியில் ரூ. 13,690 இலட்சம் பெறுமதி கொண்ட 136,100 காசோலை கள் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

## வெளியீடுகள்

1986 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கி ஆண்டறிக்கை நாணயச் சட்ட விதியின் 35 (1) பிரிவு நியதிகட்கமைய மாண்புமிகு நிதி திட்டமிடல் அமைச் சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் நாட்டின் பொருளா தாரப் போக்குகளினதும் அபிவிருத்திகளினதும் கூடியளவு விபரமான ஆய்வுகளைக் கொண்ட 1986 ஆம் ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வும் 1987 செத்தெம் பரில் வெளியிடப்பட்டது. 1987 ஆம் ஆண்டின் முதலரைப் பகுதி பற்றிய ஒரு

சுருக்கமான பொருளாதார மீளாய்வு ''1987 இன் முதலரைப் பகுதிக்கான பொருளாதாரச் செயலாற்றம்'' என்ற தலைப்பில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 1987 நவெம்பரில் வெளியிடப்பட்டது.

இவ்வாண்டில் வேறு பல வெளியீடுகளும் வெளியிடப்பட்டன. அவற்றுள் இலங்கையின் பொருளாதார சமூக புள்ளி விபரங்கள்—1986 தொகுதி IX, சமூக பொருளாதாரத் தரவுக் கையேடு—1987 என்பனவும் அடங்கும். இவ் வெளியீடுகள் முக்கிய பொருளாதார மாறிகளின் அடிப்படைத் தரவுகளைக் கொண்டிருந்தன. இலங்கையின் விலையும் கூலிகளும் புள்ளி விபரங்கள்—1985 உம் அண்மைக் காலத்தில் இலங்கை நாணயம் 1938—1985 என்பனவும் இவ்வாண்டில் வெளியிடப்பட்டன. இலங்கையில் வர்த்தக தங்கிகளின் வாடிக்கையாளர் பணிகளின் அளவீட்டு அறிக்கை, இலங்கையில் வியாபார நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்ட முதலீடுகளும் பற்றிய 1985 ஆம் ஆண்டின் அளவீடு பற்றிய அறிக்கைகள் 1983–84 உம், 1985–86 உம், உயர் அலுவலர் ஆய்வுத் தொகுதி எண் 14, எண் 1 உம், 2 உம் என்பன இக்காலப்பகுதியில் வெளியிடப்பட்ட ஏனைய வெளியீடுகளாகும். வங்கி ஐக்கிய நாடுகள் சிறுவர் கல்வி நிதியத்துடன் இணைந்து ''இலங்கையில் வறுமை ஒழிப்பு'' என்பது பற்றி ஆய்வரங்கினை நடாத்தியதுடன் ''இலங்கையில் வறுமை ஒழிப்பு'' என்ற அறிக்கையும் வெளியிடப்பட்டது. கொடுகடன் செய்தித் திரட்டு எண்—4, சிங்கள கதைச் சித்திர நூல் ''செபவு சிகினயக்'' பருவ வெளியீடுகள் எண்கள் 15, 16, 17 என்பனவும் வெளியிடப்பட்டன. செய்தித் திரட்டு, சிங்கள மாதாந்த வெளியீடான சற்றகன, ஆங்கில செய்தி அளவை என்பன ஆய்விற்குரிய ஆண்டில் தொடர்ந்தும் வெளியிடப்பட்டன.

### நூலகம்

நூலகமானது வங்கியில் பணியாற்றும் அலுவலர்களின் உடனுதவும் நிலையமாகத் தொடர்ந்தும் பிரபல்யம் பெற்று விளங்குகின்றது. வெளியார் மிகக் குறைந்த எண்ணிக்கைக்குக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தபோதும் இதன் பயனைப் பெற்றிருக்கின்றனர். இவ்வாண்டில் பொருளியல் மற்றும் இது தொடர்பான துறைகளில் நூலகத்தில் 1,263 புதிய ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

### ஆய்வரங்குகள்

1987 ஆம் ஆண்டில் மத்திய வங்கியில் பின்வரும் புகழ்மிக்க பொருளியலாளர்கள் அலுவலர்களுக்குப் பயன்மிக்க விடயங்களில் ஆய்வரங்குகளை நடாத்தினர்:—

1. காவாட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியை சாந்தி தேவராசன்—சீராக்கமற்ற வளர்ச்சி; தாய்லாந்து 1973—82.

2. உலக வங்கியைச் சேர்ந்த முனைவர் சரத் இராசபத்திரன—கைத்தொழில் மயமாக்கமும் வெளிநாட்டு வர்த்தகமும்.

3. சிட்டி கோப் முதலீட்டு வங்கி—நியூயோர்க்கைச் சேர்ந்த முனைவர் மைக்கேல் அம்சாலினும், திரு. செத் மொயரேவிற்ஸ்சும்—தனியார் மயமாக்கல்.

வங்கியின் ஆராய்ச்சித் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. டபிள்யூ. ஏ. விஜயவர்த்தனவும் ''இலங்கையில் பணநிரம்பலின் வட்டி நெகிழ்ச்சி'' என்னும் விடயத்தின்மீது ஆய்வரங்கொன்று நடாத்தினர்.

**ஆராய்ச்சி நடவடிக்கைகள்**

மீளாய்விற்குரிய ஆண்டில் மத்திய வங்கி பொருளாதாரத்தின் பல்வேறு அம்சங்களுடன் தொடர்பான ஆராய்ச்சி வேலைகளின்மீது தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க கவனத்தைச் செலுத்தியது. 1987 ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கி அலுவலர்களினால் நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் பின்வருமாறு:—

1. இலங்கையின் மூலதனச் சந்தையிப் அபிவிருத்தி.

2. இலங்கைக்கான ஒரு பேரண்டப் பொருளியல் மாதிரி; இலங்கை மாதிரி—ஆசிய பசுபிக் நாடுகளின் பொருளாதார சமூககூட்டுறவு தொடர்பு

3. முக்கிய நாணயங்களின் செலாவணிவீத மாற்றங்களினால் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட தாக்கம்: 1977—1986 இன் இலங்கையை சிறப்பாகக் கொண்டு ஆராயப்பட்டது.

4. வீட்டுத்துறையின் வேறுபட்ட வகை வலுவிற்கான கேள்வியின்மீது வருமான பங்கீட்டுத் தன்மையின் தாக்கம்.

5. உள்நாட்டுக் கைத்தொழிலின்மீது 1984 இன் தீர்வைச் சீர்திருத்தத்தின் தாக்கம்.

6. வரி இயலளவு மாதிரியில் வரி விகித பகுப்பாய்வு.

7. இலங்கையில் பணநிரம்பலின் வட்டி நெகிழ்ச்சி.

8. தெரிந்தெடுக்கப்பட்ட பொருளியல் மாறிகளின் மீது மத்திய வங்கிப் பிணைகளின் தாக்கம் பற்றிய ஒரு மதிப்பீட்டு மாதிரி.

9. இலங்கையில் கைத்தொழில்களுக்குள்ளேயான வர்த்தகம்.

10. இலங்கையில் வீடமைப்புத் தேவைகளை ஈடுசெய்வதற்கான மூலவளங்கள்.

11. ''வரி இயலளவு மாதிரியில் வரி வீத பகுப்பாய்வு—1970—1985 இலங்கையைச் சிறப்பாகக் கொண்டு ஆராயப்பட்டது''.

## அளவீடுகள்

### நுகர்வோர் நிதியும் சமூக பொருளாதார அளவீடும் 1986/87

*1986* ஒற்றோபரில் தொடங்கப்பட்ட *1986—87* ஆம் ஆண்டிற்கான நுகர்வோர் நிதி, சமூக பொருளாதார அளவீட்டின் கணிப்பீட்டு வேலைகள் முடிவுற்றன. அளவீடு 12 மாதகாலப் பகுதியில் 4 சுற்றுகளில் நடத்தப்பட்டது. அளவீட்டின் முதன்மைக் குறிக்கோள் நாட்டின் வீட்டுத்துறையின் நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார நிலைமைகளின்மீது அனைத்தையும் உள்ளடக்கிய தரவினை உருவாக்குவதேயாகும்.

### வியாபார நடவடிக்கைகள், திட்டமிடப்பட்ட முதலீடுகள் என்பனவற்றின் மீதான அளவீடு

முதலீட்டின் அமைப்பு, அதன் போக்கு, திட்டமிடலின் அளவு நிதி மூலங்களும் அவற்றின் பயன்பாடும், முதலீட்டின் அளவு என்பனவற்றைக் கணிக்கும் பொருட்டு ஆண்டு அடிப்படையில் வியாபார நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்ட முதலீடுகளும் என்பன பற்றிய அளவீடு நடத்தப்பட்டது. *1983—84——1985—86* காலப் பகுதிக்கான வியாபார நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்ட முதலீடுகளும் பற்றிய அளவீட்டின் மீதான அறிக்கை *1987* ஒற்றோபரில் வெளியிடப்பட்டது. *1984—85——1986—87* காலப் பகுதியை உள்ளடக்குகின்ற அடுத்த அளவீட்டிற்கான தரவுச் சேகரிப்புக்கள் நிறைவு பெற்றுள்ளதுடன் அறியப்பட்டவற்றின் மீதான அறிக்கை *1988* இல் வெளியிடப்படும்.

### நாடளாவிய தரவுகள் சேகரிக்கும் முறை

*1978* இன் இறுதிக் காலாண்டு தொடக்கம் தொழிற்பட்டுவரும் நாடளாவிய தரவுகள் சேகரிக்கும் முறையின் கீழான தரவுச் சேகரிப்பினை வங்கி தொடர்ந்தும் நடத்தியது. *200* இற்கும் மேற்பட்ட நுகர்வோர் விடயங்களின் சில்லறை விலைகள் பரந்த அளவிலான விடயங்களின் உற்பத்தியாளர் விலைகள், வேளாண்மை உள்ளீடுகளின் சில்லறை விலைகள் நெற்செய்கை, தேயிலை, இறப்பர், தெங்கு சிறு உடைமைகள், அதே போன்று சிறிய அளவு கட்டடவாக்க நடவடிக்கைகள் என்பனவற்றின் நடவடிக்கை அடிப்படையிலான நாட்கூலி வீதங்கள் தீவு முழுவதும் பரந்துபட்டுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட ஏறத்தாழ *100* நிலையங்களிலிருந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் ஆண்டு வெளியீடான ''விலையும் கூலியும் புள்ளிவிபரங்கள்——சில்லறை உற்பத்தியாளர்களும் உள்ளீட்டு விலைகளும் கூலிகளும்'' என்ற நூலில் சுருக்க ஆய்வொன்றுடன் வெளியிடப்பட்டுள்ளன.

### இறக்குமதி தாராளமாக்குதல் நிகழ்ச்சித் திட்டத்தைக் கண்காணித்தல்

கொடுகடன் பத்திரங்கள், மற்றும் கொடுகடன் பத்திரங்களுக்கெதிராகப் பெறப்பட்ட உண்டியல்கள் என்பனவற்றின் மீது மாதாந்த தரவுகளைப் பெறுவதன் மூலம் இறக்குமதி தாராளமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான இறக்குமதிகளை தொடர்ந்தும் கண்காணித்தது. இத்தரவுகளும், இத்தரவுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகளும் ஒழுங்கான அடிப்படையில் தொடர்பான அதிகாரிகளுக்குக் கிடைக்கச் செய்யப்பட்டன.

## பயிற்சி

ஆய்விற்குரிய ஆண்டிலும் வங்கி அதன் அலுவலர்களுக்குக் கல்வி சார்ந்த, கல்வி சாராத துறைகளில் பயிற்சி வழங்கும் கொள்கையைத் தொடர்ந்தது. இவ்வாண்டுக் காலத்தில் பொருளியல், புள்ளிவிபரவியல், கணனி அறிவியல் மற்றும் அவை சார்ந்த துறைகளின் பட்டப்பின்படிப்புகளுக்கு மாத்திரம் மட்டுப் படுத்தப்பட்ட கல்வி சார்ந்த நெறிகளுக்கு வெளிநாட்டு, பல்கலைக்கழகங்களில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இவை முதுமானி, முனைவர் பட்டங்களை வழங்கும் நெறிகளையும் உள்ளடக்கியிருந்தன. இவ்வாண்டில் மொத்தமாக 6 அலுவலர்கள் வெளிநாட்டில் பட்டப்பின் படிப்பு நெறிகளில் ஈடுபட்ட வேளையில் 3 அலுவலர்கள் இலங்கையில் பட்டப்பின் படிப்பினை மேற்கொண்டனர்.

கல்விசாராத் துறைகளிலான பயிற்சிகள் செயல்முறை குறுங்காலப் பயிற்சி நெறிகள் ஆய்வரங்குகள், வேலைத்தளங்கள், கல்விச் சுற்றுலாக்கள் பார்வையிடல் போன்றவற்றுடன் தொடர்புடையதாக இருந்ததுடன் கிராமிய அபிவிருத்தி, வேளாண்மை மற்றும் கைத்தொழில் கொடுகடன், உள்ளூர் வெளிநாட்டுக் கணனிக் கற்கைகள் போன்ற துறைகளை முக்கியமாக உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டில் எல்லாமாக 98 அலுவலர்கள் வெளிநாடுகளில் குறுங்காலப் பயிற்சிகளைப் பெற்ற வேளையில் இன்னுமொரு 297 அலுவலர்கள் உள்நாட்டுப் பயிற்சி நெறிகளில் பங்குபற்றினர் .மத்திய வங்கி அலுவலர்களுக்கான வர்த்தக வங்கித் தொழில் நடைமுறைகள் தொழிற்பாடுகளில் தொழில்புரியும் போதே பயிற்சி பெறும் நிகழ்ச்சித் திட்டம் இலங்கை வங்கியிலும் மக்கள் வங்கியிலும் 1987 இலும் தொடர்ந்து நடைபெற்றது.

வங்கி ''நிதியியல் முறையும் வங்கித் தொழிலும்'' என்ற விடயத்தின்மீது தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் பயிற்சி நெறி ஒன்றினை இயைபுபடுத்தியது. இது இத்தொடரில் முதலாவதாக இருந்ததுடன் 1987 ஒற்ரோபர் 7 முதல் நவெம்பர் 5 வரை கொழும்பில் நடாத்தப்பெற்றது.

## தரவு செய்முறைப்படுத்தல்

1987 இல் வங்கியானது, தற்பொழுது பின்பற்றும் செயல்முறைக்கான வசதிகளை முன்னேற்றும் வேளையில், அடுத்துவரும் 5 முதல் 10 ஆண்டுகளுக்கான வங்கியின் தரவு செய்முறைப்படுத்தும் தேவைகளை மதிப்பிட்டு திட்டமிடும் முயற்சியினையும் கொண்டிருந்தது. வங்கியானது இலங்கை தன்னியக்கத் தீர்ப்பனவு நிலையச் செயற்றிட்டம் நுகர்வோர் நிதிய அளவீடு, பொருளியல் தரவு அடிப் படையிலான செயற்றிட்டம், பயன்படுத்தும் திணைக்களங்களுக்குக் கணனிமயப் படுத்தலின் அறிமுகம் போன்ற புதிய அபிவிருத்திகளுக்குக் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தினை வழங்கியது. அத்துடன் வங்கியானது இதுவரை கணனி மயப்படுத்தப்படாத மத்திய வங்கி நடவடிக்கைகளுக்கு என விரைவுபடுத்தப்பட்ட கணனிச் செயற்றிட்டத்துடன் தொடர்புபட்ட வேலைகளுக்கு முக்கிய இடத்தினை வழங்கியது. பணிகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**இலங்கை தன்னியக்கத் தீர்ப்பனவு நிலையம்**

இலங்கை தன்னியக்கத் தீர்ப்பனவு நிலையச் செயற்றிட்டம் 1986 இல் தொடங்கப்பட்டது. இச்செயற்றிட்டத்தின் முதல் நோக்கமாகக் கொழும்பில் கைகளினால் மாற்றிக் கொள்ளப்படும் காசோலைகளுக்குப் பதிலாக மிக நவீன, முன்னேற்றமடைந்த தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதாகும்.

சிறப்புக் கணனிக் கருவிகளுடனான புதிய அலுவலகமொன்று நிறுவப்பட்டுள்ளது. ஊழியர்களை ஆட்சேர்த்தல், பயிற்சியளித்தல் மற்றும் வன்வகை, மென்வகை கணனி முறைகளை அமைத்தலும் பரீட்சித்தலும் 1987 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1987 இறுதியில் இலங்கைத் தன்னியக்கத் தீர்ப்பனவு நிலையம், கொழும்பு நகரின் வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஓரளவு தயாராக இருந்ததுடன் காந்த மை எண்களைக் கொண்ட பெருமளவு காசோலைகளைப் புழக்கத்திற்கு விட எதிர்பார்த்திருந்தது. இலங்கைத் தன்னியக்கத் தீர்ப்பனவு நிலையம் 1988 தொடக்க காலத்தில் தொழிற்படத் தொடங்கும். இது காசோலைகளின் விரைவான செய்முறைப்படுத்தலுக்கான அமைப்பினைத் தருவதுடன் எதிர்காலத்தில் மூலவளங்களை அதிகரிக்காமலே அதிக தொகையான காசோலைகளைக் கையாளுவதற்பு இயலச் செய்யும். அத்துடன் பிரிக்கும்போது மனித தவறுகளை நீக்குவதுடன் வங்கிகளுக்கு மிகவும் விளக்கம் நிறைந்த முறையாகவுமிருக்கும். முழுச் செயற்றிட்டமும் வங்கித்தொழில் தன்னியக்கததிற்கும் மின்னியக்க நிதிய மாற்றல்களுக்கும் உதவும் முக்கிய படியாகவும் கணிக்கப்படலாம். இதுவே உலகின் வங்கித்தொழிலின் நடைமுறைப் போக்காகவும் விளங்குகின்றது.

**2. நுகர்வோர் நிதி அளவீடு**

1986—87 நுகர்வோர் நிதி, சமூகப் பொருளாதார அளவீட்டில் சேகரிக்கப்பட்ட தரவுகளை தொகுத்து நிறைவுபடுத்துவதற்கான முறைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வடிவமைத்து முன்னேற்றல், அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பன 1987 இல் முடிவடைந்துள்ளன. பல்வேறு வகைப்பட்ட அட்டவணைகளின் கீழான தரவுப் பதிவுகளும் முடிவடைந்துள்ளன. தரவுகளைத் தொகுத்தலும் நிறைவுபடுத்தலும் நடைபெற்றுக்கொண்டிருப்பதுடன் 1988 மாச்சில் நிறைவுபெறும் என எதிர்பார்க்கப்படுவதால் அட்டவணைப்படுத்துதல் 1988 இல் செய்து முடிக்கப்படும்.

**3. பொருளாதார தரவு அடிப்படை**

வங்கியானது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பயன்பாட்டிற்கென ஒன்றையும் உள்ளடக்கிய தரவு அடிப்படையை ஏற்படுத்தும் பணியினை மேற்கொண்டுள்ளது. நடப்பு ஆண்டில் வங்கிக்குத் தேவையான மென்வகைகளையும், பயிற்றப்பட்ட அலுவலர்களையும் பெற்றுக்கொண்டதுடன் வன்வகைக்கான குறிப்பிடத்தக்க தரமுயர்த்தலையும் செய்துள்ளது.

**4. பயன்படுத்தும் திணைக்களங்களில் கணனிக்கருவிகளை அறிமுகப்படுத்துதல்**

1987 இல் மத்திய வங்கியானது, தேவையான துறைகளில் கணனிமயப் படுத்துவதற்கு விரைவான செயற்றிட்டங்களை மேற்கொண்டது. பயன்படுத்தும் திணைக்களங்களில் தரவு செய்முறைக் கருவிகளைக் குறிப்பாக, தனி ஆளுக்குரிய கண்னிகளையும் அறிமுகப்படுத்தத் தீர்மானித்தது. தேவைப்படின் முக்கிய கணனி யுடன் தொடர்புபடுத்தலும் மேற்கொள்ளப்பட்டது. மிகப் பெரிய தரவுத் தொகுதிகளைக் கொண்ட விண்ணப்பங்களும் கொடுக்கல் வாங்கல்களும் தொடர்ந்தும் முக்கிய கணனிகளிலேயே மேற்கொள்ளப்பட்டன.

## முகாமைக் கணக்காய்வு

வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது தமது வேலைகளின் நிகழ்ச்சித் திட்டங்களின்படி 1987 இல் வங்கியின் பிரதேச அலுவலகங்களான மாத்தளை, மாத்தறை, அநுராதபுரம் உட்பட வங்கியின் பல்வேறு திணைக்களங்களிலும் கணக்குகள்க் கணக்காய்வு செய்தது.

வங்கியின் மனிதவலுத் தேவையைப் பற்றிய ஆய்வின்மீது நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக முகாமைத்துவப் பணிகள் பிரிவு இவ்வாண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மனிதவலுத் தேவைகளைப் பற்றிய ஒரு ஆய்வினை மேற்கொண்டுள்ளது.

வங்கியினால் தற்பொழுது பயன்படுத்தப்பட்டுவரும் கணக்காய்வுக் கையேட்டினைத் திருத்தியமைக்கும் பணி 1987 இலும் தொடர்ந்திருந்தது.

## ஆளணி

ஆளுநர், முனைவர் டபிள்யூ. இராசபுத்திர 1987 ஆம் ஆண்டுக் காலத்தில் பின்வரும் மாநாடுகளிலும், கூட்டங்களிலும் கலந்துகொண்டார்:—

(1) நேபாளத்தில் காத்மண்டுவில் நடைபெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கியின் ஆளுநர்களது 22 ஆவது மாநாடு.

(2) பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆளுநர்கள் சபையினது இடைநிலைக் குழுவின் 28 ஆவது கூட்டத்திலும், ஐ.அ.நா. இல் வாசிங்டனில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுவினதும், 24 குழுக்களினதும் கூட்டங்களிலும்.

(3) பர்மாவில் றங்கூனில் நடைபெற்ற ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டம்.

(4) ஐக்கிய இராச்சியம், லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய மத்திய வங்கி ஆளுநர்களின் மாநாடும், சுவிற்சர்லாந்தில் பசிலில் நடைபெற்ற பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கியின் கூட்டம்.

(5) ஐக்கிய அமெரிக்க நாடுகள் வாசிங்டனில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியத்தினதும், உலக வங்கியினதும் ஆண்டுக் கூட்டங்கள்.

(6) அவுஸ்திரேலியா, சிட்னியில் நடைபெற்ற மத்திய வங்கி ஆளுநர்களின் தென்கிழக்காசிய நியூசிலாந்து அவுஸ்திரேலியா அமைப்பின் 17 ஆவது கூட்டம்.

ஆளுநர் இலங்கையில் இல்லாத காலத்தில் மூத்த துணை ஆளுநர் திரு. டி. எல். கன்னங்கர வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும், நாணயச் சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

துணை ஆளுநரான திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன மூத்த துணை ஆளுநராக நியமிக்கப்பட்டு ஆளுநரும், மூத்த துணை ஆளுநரான திரு. டி. எல். கன்னங்கராவும் இலங்கையில் இல்லாத காலத்தில் வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும், நாணயச் சபைத் தலைவராகவும் செயற்பட்டார்.

துணை ஆளுநரான முனைவர் கே. எஸ். ஈ. ஜயதிலக மூத்த துணை ஆளுநராக நியமிக்கப்பட்டு ஆளுநர், மூத்த துணை ஆளுநரான திரு. டி. எல். கன்னங்கர, துணை ஆளுநரான திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன ஆகியோர் இலங்கையில் இல்லாத காலத்தில் வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும், நாணயச் சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

### நாணயச்சபை

நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் இல்லாத காலத்தில் திறைசேரியின் துணைச் செயலாளரான திரு. ஜி. குமாரதுங்க நாணயச் சபையின் மாற்று அலுவல்கள் உறுப்பினராகக் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

**நியமனங்கள்**

மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகப் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன 1987 சனவரி 1 இலிருந்து துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

நிறைவேற்றுப் பணிப்பாளர் முனைவர் கே. எஸ். ஈ. ஜயதிலக 1987 யூன் 1 இலிருந்து துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ். டபிள்யூ. பி. அமரசூரிய 1987 யூன் 5 இலிருந்து நாணயச் சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

ஊழியர் சேமநிதியத்தின் கண்காணிப்பாளர் திரு. டி. கே. ஜயவர்த்தன, ஊழியர் சேமநிதியத்தின் கண்காணிப்பாளராக இருப்பதுடன் 1987 நவெம்பர் 1 இலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

செயலாளர் திரு. தி. வத்தேகம செயலாளராக இருப்பதுடன் 1987 நவெம்மர் 1 இலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

சிறப்புச் செயற்றிட்டங்களின் மதியுரையாளர் திரு. வி. என். டி. நாணயக்கார 1987 யூலை 27 இலிருந்து அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் மதியுரையாளராக நியமிக்கப்பட்டார்.

செலாவணிக் கட்டுப்பாட்டாளர் திரு. பி. எம். நாகாவத்த 1987 சனவரி 15 இலிருந்து செலாவணிக் கட்டுப்பாட்டாளருடன், பணிமனைத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

வங்கித்தொழில் அபிவிருத்தி, பயிற்சி ஆகியவற்றின் பணிப்பாளரும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளருமான முனைவர் டபிள்யூ. எட்டியாராச்சி 1987 சனவரி 15 இலிருந்து பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பணிமனைப் பணிப்பாளர் திரு. எஸ். பட்டிவிதான 1987 சனவரி 15 இலிருந்து கிராமிய வங்கித்தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

வங்கி மேற்பார்வையின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. வை. ஏ. பியதிஸ்ச 1987 சனவரி 15 இலிருந்து வங்கி மேற்பார்வையின் பதில் மேலதிகப் பணிப்பாளருடன் வங்கித்தொழில் அபிவிருத்தியின் பதில் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். 1987 ஒத்தோபர் 15 இலிருந்து அவர் வங்கி மேற்பார்வையின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பொருளாதார ஆராய்ச்சியின் துணைப் பணிப்பாளர் திரு. ரி. ஜி. சௌந்தரநாயகம் 1987 சனவரி 15 இலிருந்து பொருளாதார ஆராய்ச்சியின் பதில் மேலதிகப் பணிப்பாளராக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஏனைய கடமைகளுடன் பயிற்சிக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

பொதுப்படுகடனின் துணைக் கண்காணிப்பாளர் திரு. வி. சிவசுப்பிரமணியம் 1987 சனவரி 15 இலிருந்து பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

துணை முதன்மைக் கணக்காளர் செல்வி சி. அபயநாயக 1987 சனவரி 15 இலிருந்து பதில் மேலதிக முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டுப் பதில் மேலதிக முதன்மைக் கணக்காளருக்கான அவரது கடமைகளுடன் கொள்கை திட்டமிடல் பிரிவிற்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் துணைப் பணிப் பாளர் திரு. ஏ. எம். எஸ். றதலியகொட 1987 சனவரி 15 இலிருந்து கிராமிய வங்கித்தொழில் அலுவலகப் பயிற்சிக் கல்லூரியின் பதில் மேலதிகப் பணிப்பாள ராக நியமிக்கப்பட்டார். 1987 சனவரி 28 இலிருந்து அவர் பணிமனைப் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

துணைச் செயலாளர் திரு. ஈ. ஜே. ஆனந்தப்பா 1987 நவெம்பர் 1 இலிருந்து ஊழியர் சேமநிதியத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

அபிவிருத்தி நிதித் துணைப் பணிப்பாளர் திரு. பி. ரி. சிறிசேன 1987 நவெம்பர் 1 இலிருந்து அபிவிருத்தி நிதியின் பதில் மேலதிகப் பணிப்பளராக நியமிக்கப்பட்டார். 1987 நவெம்பர் 4 இலிருந்து அவர் வங்கி மேற்பார்வையின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

தகவல் திணைக்களத் துணைப் பணிப்பாளர் திரு. டபிள்யூ. ஜயசேன 1987 நவெம்பர் 1 இலிருந்து பதில் மேலதிகச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

கிராமிய வங்கித்தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி துணைப் பணிப்பாளர் திரு. பி. பட்டியாராச்சிகே 1987 நவெம்பர் 1 இலிருந்து கிராமிய வங்கித் தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

நிதி, திட்டமிடல் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட திணைக்களத் துணைத் தலைவர் முனைவர் ஜி. அபயசேகர, தேசிய சேமிப்பு வங்கியின் தலைவராகத் தாம் வகிக்கும் கடமைகளுடன் 1987 மாச்சு 9 இலிருந்து வங்கித்தொழில் அபிவிருத் திக்குப் பொறுப்பான சிறப்பு அலுவலராகவும் நியமிக்கப்பட்டார். 1987 செத் செம்பர் 16 இலிருந்து அவர் மத்திய வங்கிப் பணிக்கு முழுநேர அடிப்படையில் திரும்பிவந்தார்.

திரு. எச். பிறேமரத்ன (முன்னை நாள் முதன்மைக் கணக்காளரும் நிறை வேற்றுப் பணிப்பாளரும்) 1987 நவெம்பர் 1 இலிருந்து வங்கித்தொழில், நிதி நிறுவனங்களின் மேற்பார்வையின் ஆலோசகராக ஒப்பந்த அடிப்படையில் நிய மிக்கப்பட்டார்.

**விடுவிப்பில் உள்ள அலுவலர்கள் (1987 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)**

பின்வரும் வங்கி அலுவலர்கள் இலங்கையில் அமைச்சுக்கள், அரச திணைக் களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் என்பவற்றுக்கும் பன்னுட்டு அமைப்புக் களுடன் செயற்படுவதற்குமாக விடுவிக்கப்பட்டனர்:—

முனைவர் எஸ். ரி. ஜி. பர்ணுந்து மக்கள் வங்கியின் தலைவராகக் கடமை யாற்றுவதற்காக நிதி, திட்டமிடல் அமைச்சிற்கு.

முனைவர் என். ஈ. எச். சந்திரரத்ன இலங்கை வங்கியின் தலைவராகக் கடமையாற்றுவதற்காக நிதி, திட்டமிடல் அமைச்சிற்கு.

திரு. எஸ். ஈஸ்பரதாசன் பன்னுட்டு நாணய நிதியத்தில் கடமையாற்று வதற்காக மைக்குறனேசியாவுக்கு.

முனைவர் எல். ஈ. என். பர்ணுந்து வங்காளதேசம், பூட்டான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமை யாற்றுவதற்காகப் பன்னுட்டு நாணய நிதியத்திற்கு.

திரு. ஏ. ஏ. டி. ஜஸ்ரின் கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றுவதற்காகக் கைத்தொழில், அறிவியல் அலு வல்கள் அமைச்சிற்கு.

முனைவர் ஏ. சி. றன்தெனி, திரு. எம். பி. திசநாயக்க, முனைவர் எஸ். எஸ். கொலம்பகே, திருவாளர்கள் ஈ. ஏ. பி. என். டயஸ், டி. எஸ். ஐ. ஏ. ஆரியதாச, ஜே எம். ரி. பி. ஜயசுந்தர, ஜி. ஏ. வி. பொன்சேக, முனைவர் ஐ. குமாரசுவாமி, திருவாளர்கள் சி. வியனகே, ரி. எம். சற். முத்தாலிப், திருமதி வை. எம். இந்திரரத்ன ஆகியோர் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

திரு. கே. பி. தொடங்கொல்லேகம கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சிற்கு.

திரு. என். ஏ. த. எஸ். அத்துரலிய இலங்கை மகாவலி மேலாண்மைச் சபைக்கு.

**ஓய்வு பெறல்**

செலாவணிக் கட்டுப்பாட்டு மதியுரையாளர் திரு. டி. ஏ. பி. வீரவர்த்தன 1987 மே 12 இலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுர்.

**இறப்பு**

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் திரு. ஈ. பாலசிங்கம் 1987 செத்தெம்பர் 29 இல் காலமானுர்.

**1987 ஆம் ஆண்டுக் காலத்தின் நடவடிக்கைகள் மீதான அறிக்கை**

நிறுவகத் திணைக்களம் அலுவலர்களைச் சேர்த்தல் தொடர்பான எல்லா விடயங்கள் (பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக்கான தொடக்க அலுவலர்கள் உட்பட) பதவி உயர்வுகள், வேலைச் செயலாற்றத்தின் அளவிடல், ஒழுக்க விடயங்கள் மற்றும் இது போன்ற அலுவலர்களது விடயங்களைக் கையாண்டது.